


# திருக்கோயில்



லை

விலை
ரூபாய் ஐந்து




திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் ஆலயத்தில் 19.6.98 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 75 இலவசத் திருமணங்களை நடத்திவைத்துச் சிறப்பித்தார்கள். இதே விழாவில் அர்ச்சகர் குடியிருப்பு, ஆலய அலுவலக அலங்காரவளைவு ஆகியவற்றைத் திறந்துவைத்து, இசைக்கலைஞர் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரை ஆற்றினார்கள். மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு, அறநிலையத்துறை அமைச்சர் முனைவர். மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இச்சீரிய விழாவிற்குத் தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்றஉறுப்பினர்கள், அறநிலையத்துறைச் செயலர் திருமிகு. த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப., அறநியைத்துறை ஆணையர் திரு. ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப., திருவள்ளுவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். தவத்திரு சுவாமி இராமதாசர் ஆசியுரை வழங்கினார். அறங்காவலர் குழுத் தலைவர் திரு. டெக்கான் மூர்த்தி அவர்களும், அறங்காவலர்களும், திருக்கோயில் நிர்வாக அதிகாரி - இணை ஆணையாளர் திரு. ப. இராஜா, பி.எஸ்.சி.பி.எல்., அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்


| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 40 | திருவள்ளுவர் ஆண்டு 2029 ஜூலை 1998 | வெகுதானிய ஆண்டு ஆடி | மணி 7 |
|---|---|---|---|



சிறப்பாசிரியர்

**திருமிகு ச. மெய்கண்ட தேவன்,** இ.ஆ.ப.,

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.,

**திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்**

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

**திரு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திரு மு. இராமச்சந்திரன்,** பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


*முகப்பு*

திருவேற்காடு
அருள்மிகு தேவிகருமாரி அம்மன்

## பொருளடக்கம்


**திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் 75 இணைகளுக்கு இலவசத் திருமணம் நடத்தி வைத்து ஆற்றிய சிறப்புரை**

***அறந்தழைக்க அரும்பணிகள்***
- திருமிகு. ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.,
ஆணையாளர், இந்து சமய அறநிலையத்துறை.

***சைவமும் பெரிய புராணமும்***
- முனைவர் இரா. செல்வகணபதி

***குமரகுருபரர் திருவுள்ளம்***
- முனைவர் த. அமிர்தலிங்கம்

***கம்பனும் திருமுறைகளும்***
- கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

***நாதமுனிகள்***
முனைவர் தெ. ஞானசுந்தரம்

***தீவினைகள் நீங்கத் திருநீலகண்டப் பதிகம்***
த. ஆறுமுகம்

***பெரிய புராணத்தில் சில வினாக்களும் விடைகளும்***
- பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம்

***வாசகர் எண்ணங்கள்***



திருக்கோயில்

*இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை.*

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் 75 இணைகளுக்கு இலவசத் திருமணம் நடத்திவைத்து ஆற்றிய சிறப்புரை

***மணவிழா நிகழ்ச்சி***

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் இந்து அறநிலையத்துறை சார்பில் 75 இணைகளுக்கு இலவச திருமண விழா 19.6.98 அன்று காலை நடைபெற்றது.

கோயிலின் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் 75 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவிற்கு இந்து அறநிலையத்துறை அமைச்சர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் துரைமுருகன், வ. முல்லை வேந்தன், திருமதி. சற்குணபாண்டியன், க. சுந்தரம், அறநிலையத்துறை செயலர் சீனிவாசன், ஆணையர் மெய்கண்டதேவன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபாகர், செ. குப்புசாமி எம்.பி., சுதர்சனம் எம்.எல்.ஏ., கும்மிடிப்பூண்டி கி. வேணு எம்.எல்.ஏ., டி.சி. விஜயன் எம்.எல்.ஏ., இ.ஏ.பி. சிவாஜி எம்.எல்.ஏ., ராமன் எம்.எல்.ஏ., சுவாமி ராமதாசு ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.


விழாவில் இசைக் கலைஞர்களுக்காக கட்டப்படும் குடியிருப்புக்கு முதல்வர் கலைஞர் அடிக்கல்லை நாட்டினார். மேலும் அலுவலக நுழைவு வாயிலையும், அர்ச்சகர்களுக்கான குடியிருப்புகளையும் முதல்வர் கலைஞர் திறந்து வைத்தார்கள்.

ஒவ்வொரு மணமக்களுக்கும் பட்டுப் புடவை, வேட்டி, வீட்டுக்குத் தேவையான பொருட்கள் ரூ. 3 ஆயிரம் செலவில் சீர்வரிசையாக வழங்கப்பட்டது. இந்த சீர்வரிசைகளை முதல்வர் கலைஞர் அவர்களும், முதல்வர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள் ஆகியோர் வழங்கி வாழ்த்தினர்.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலில் 75 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை பின்வருமாறு:

இன்றையதினம் அறநிலையத் துறையின் சார்பாகவும் நம்முடைய அன்பிற்குரிய தவத்திரு ராமதாசு அடிகளார் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாகவும் அவரோடு ஒத்துழைத்த அறங்காவல் குழுவினர்களின் ஆர்வத்தின் காரணமாகவும் இங்கே 75 மணமக்களுக்கு மணவிழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடை பெற்றிருக்கின்றது. இந்த மணமக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது தம்பி துரைமுருகன், ஜோடிகள் ஜோடிகள் என்றே சொன்னார். நல்ல தமிழில் இணை என்று தமிழ்க்குடிமகன் சொன்னதுபோல சொல்லி இருக்கலாம். ஆனால் ஏதோ இரண்டு ஜோடி வேட்டி, இரண்டு ஜோடி வளையல் என்று சொல்வதைப் போல, தம்பி துரைமுருகனும் ஜோடிகள் என்று குறிப்பிட்டார். நானும் ஒருமுறையாவது திருத்திக் கொண்டு இணை என்று சொல்வாரா என்று எதிர் பார்த்தேன. (சிரிப்பு) ஆனால் அவர் அதற்கு இணைந்து வருவதாகத் தெரியவில்லை. ஜோடிகள், ஜோடிகள் என்றே குறிப்பிட்டார்.

ஜோடிகள் அல்ல இவர்கள் - இணைகள். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமேயானால் இல்வாழ்விலே அடியெடுத்து வைக்கும் மணமக்கள். இந்த 75 இணைகள் 75 மணமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று உங்கள் அனைவரோடும் சேர்ந்து வாழ்த்துகிறேன்.



## எத்தனையோ முறை கோவில்களுக்குச் சென்றிருக்கிறேன்

மேடைக்கு வந்ததும் நண்பர் சுதர்சனம், எம்.எல்.ஏ., அவர்கள் என்னைப் பார்த்து இப்போது தான் கோவிலுக்கு முதன்முதலாக வருகிறீர்களா என்று கேட்டார். நான் அவரிடத்தில் பதில் சொன்னேன். தம்பி துரைமுருகன் சொன்னதைப் போல - இது முதன்முறை அல்ல, எத்தனையோ முறை எத்தனையோ கோவில்களுக்குச் சென்றிருக்கிறேன் என்று அவரிடம் நான் குறிப்பிட்டேன். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச் சென்றிருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால் நான் பிறந்த ஊர் திருக்குவளையே பெரிய பாடல் பெற்ற தலம். சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தலம் திருக்குவளை. அந்த திருக்குவளையிலே உள்ள கடவுளுக்கு சரியான - மிகத் தூய்மையான தமிழ்ப் பெயர் - அந்த அம்மனை வண்டமரும் பூங்குழலாள் என்று அழகிய தமிழிலே தான் அழைப்பார்கள். எவ்வளவு அழகான தமிழ் நயத்தோடு வைக்கப் பட்ட பெயர் அது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்தக் கோவிலைச் சார்ந்துள்ள வீதியில் ஒரு குடும்பத்திலே பிறந்தவன் நான். அதற்குப் பிறகு நான் படிக்கவந்த இடம் - திருவாரூர் - அதுவும் பாடல் பெற்ற ஆலயங்களிலே ஒன்று. பிறந்த ஊரிலே, திருக்குவளையிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன். பிறகு நான் வளர்ந்த ஊரான திருவாரூரிலே உள்ள ஆலயத்திற்கும் நான் சென்றிருக்கிறேன். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் முன்பு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது இரண்டாவது முறையோ அல்லது மூன்றாவது முறையோ நான் முதல்வராக இருந்தபோது - பந்தலிட்டு நடைபெற்ற ஒரு பெரிய இலக்கிய விழாவில் ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'' என்ற தலைப்பில் ஏறத்தாழ ஒரு மணிநேரம் உரையாற்றியிருக்கிறேன். மதுரை முத்து அவர்களை கேள்விப்பட்டிருப்பீர்கள். பெரியார் காலத்திலே, அண்ணா காலத்திலே, ஏன் என்னோடும் இந்த இயக்கத்தினுடைய தளகர்த்தராக வாழ்ந்தவர், விளங்கியவர். தீவிர சுய மரியாதைக்காரர். அவர் என்னை அழைத்துக் கொண்டு செல்ல பழனித் திருக்கோவிலுக்கு இருவரும் சென்றிருக்கிறோம். அங்கே வந்திருந்த பக்தர் களையெல்லாம் கண்டு பேசியிருக்கிறோம். அவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

### தமிழகக் கோவில்களில் உள்ள சிற்பங்கள் என்னைக் கவர்ந்தவை

தமிழ்நாட்டிலே உள்ள ஆலயங்களில் உள்ள சிற்பங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. குறிப்பாக மதுரைக்கு அருகிலே உள்ள அழகர் கோவில் சிற்பங்களைப் பற்றி நான் பல நண்பர்களிடம் பேசி மகிழ்ந்திருக்கிறேன். நெல்லை மாவட்டத்தில் கிருஷ்ணாபுரம் என்கிற ஊரிலே உள்ள கோவில் சிற்பங்களை நான் பலமுறை சென்று பார்த்துப் பரவசப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு தமிழகத்தின் திருக்கோயில்களிலே உள்ள சிற்பக் கலை என்னைக் கவர்ந்திருக்கின்றது.

இந்தக் கோவில்கள் எப்படி ஒரு காலத்தில் இயங்கின, எப்படி இயங்க வேண்டும் என்ற கருத்துக்களை ஆன்மீகக் கருத்துடைய பல பெரியவர்கள் எடுத்துக்காட்டியிருக் கிறார்கள்.

ஆலயங்களின் வருமானம் ஆலயத்திலே இருக்கின்ற ஆண்டவனுக்கு மாத்திரமே செலவிடப் படாமல் அந்த ஆண்டவனால் படைக்கப்பட்டதாகக் கூறப்படும் மக்கள் எனக் கருதப்படுகின்ற அனைவருக்கும் அவர்களுடைய நல்வாழ்விற்காகவும் அந்தத் தொகை செலவிடப்பட வேண்டும் என்பதை பல ஆன்மீகப் பெரியவர்கள் சுட்டிக்காட்டியிருக் கிறார்கள். அதன் காரணமாகத்தான் கோவிலைச்சார்ந்த இடங்களில் இது போன்ற நல் ல காரியங்கள் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எல்லாம் அந்தக் காலந் தொட்டு நடைபெற்றே வந்திருக்கின்றன. இடைக் காலத்தில் இவைகள் எல்லாம் நின்று போயிருக் கலாம்.

### ரூ. 125 கோடி கோவில் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன

அந்தக் கோயில்களை இடைக்காலத்தில் வயப்படுத்திக் கொண்டவர்கள் ஆண்டவன் பெயரால் - ஆண்டவனையும் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்றிக் கொண்டு பல பேர் இருந்திருக்கிறார்கள் என்பதை மறைக்கத் தேவையில்லை. அதனால்தான் ஆண்டவனுடைய சொத்துக்கள் - கோவில்களுக்குரிய உடைமைகள் இவைகள் எல்லாம் பலரால் கவரப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டு இந்த இரண்டாண்டுக் கால ஆட்சியில் நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சியின் காரணமாகவும் அவருக்கு அரசு தந்துள்ள ஒத்துழைப்பின் காரண மாகவும் இந்த இரண்டாண்டுக் காலத்தில் மாத்திரம் கோவில் சொத்துக்கள் - நிலம் போன்றவை, வீட்டுமனை போன்றவைகள் எல்லாம் 125 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் மீட்கப் பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மணவிழா நிகழ்ச்சியிலே உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த மணவிழாக்கள் 1982 ஆம் ஆண்டு முதல் இது போன்று திருக்கோவில்கள் மூலமாக நடத்தப் பட்டு வருகின்றன. இங்கே எடுத்துக் காட்டப்பட்ட - அரசு சார்பிலே நடத்தப்படும் ஏழையெளிய பெண் களுக்காக வழங்கப்படும் பத்தாயிரம் ரூபாய் நிதியில் நடத்தப்படும் திருமணங்கள் வேறு.

### ஏழைப் பெண்களுக்கு த் திருமண நிதி உதவித் திட்டம்

தம்பி வேணு அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல 89-90 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது ஏழை யெளிய வீட்டுப் பெண்களுக்கு அந்தப் பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால், அந்தப் பெண்ணின் திருமணத் திற்காக ஐயாயிரம் ரூபாய் அரசாங்கம் நிதியாக வழங்கும் என்று அறிவித்து அவ்வாறு வழங்கப் பட்டது. பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு இன்னொரு ஆட்சி வந்தது உங்களுக்குத் தெரியும். அந்த ஆட்சியில் இந்தத் திருமண திட்டம் மும்முரமாக ஆர்வமாகத் தொடரப்படவில்லை.

பிறகு 96 ஆம் ஆண்டு நான் மீண்டும் முதலமைச்சராக வந்த பிறகு அந்த ஐயாயிரம் ரூபாய் என்பதை பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தி இதுவரையிலே அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட ஏழையெளிய வீட்டுப் பெண்களுக்கு நிதி உதவி தந்திருக்கிறோம். இந்த ஆண்டும் பெருந்தொகை - பல்லாயிரக்கணக்கான திருமணங்களை நடத்திக் கொள்கின்ற அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

### அறநிலையத்துறை நடத்தும் இலவச திருமணங்கள்

ஆனால் அறநிலையத்துறையின் சார்பாக 82 ஆம் ஆண்டு முதல் 96 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் இந்தத் திருக்கோவில்கள் மூலம் நடத்தப்பட்ட இலவசத் திருமணங்களின் எண்ணிக்கை - 14 ஆண்டு காலத்தில் - 1,171. இந்த 14 ஆண்டுக் காலத்தில் 1,171 திருமணங்களில் கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியிலே நடைபெற்ற திருமணங்களின்

எண்ணிக்கை 294. ஆனால் இந்த இரண்டாண்டுகளில் மாத்திரம், இந்த ஆட்சியில் திருக்கோவில்களில் நடைபெற்ற திருமணங்களின் எண்ணிக்கை 1,031. (கைதட்டல்) இந்த அளவிற்கு ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையிலே விளக்கேற்றி வைக்க வேண்டுமென்பதற்காக தமிழக அரசு - அந்த அரசின் சார்புடைய அறநிலையத்துறை எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

இந்தத் திருமணத்திலே கூட அவர்களுக்கு - மணமக்களுக்கு இந்த மணவிழாவை நடத்திக் கொள்கிற செலவுகளை இந்தத் துறை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது மாத்திரமல்ல. இங்கே இந்த ஆலயத்தில் மணமக்களுக்கு ஒவ்வொரு இணைக்கும் 3000 ரூபாய் பெறுமானமுள்ள சீர்வரிசையும் தரப்படுகின்றது. இது அவர்களுக்கு கருமாரியம்மன் என்ற தாய் வீட்டி லிருந்து தரப்படுகின்ற சீர்வரிசை என்று அவர்கள் மகிழ்ச்சியோடு எண்ணிக்கொண்டு அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

### ஆலயம் என்பது எங்களுக்கு விரோதமான சொல் அல்ல

ஆலயங்களுக்கு தி.மு.கழக ஆட்சி எதிரானதல்ல. ஆனால் சில பேர் அத்தகைய ஒரு தவறான பிரச்சாரத்தை நாட்டில் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆலயம் என்ற வார்த்தை எங்களுக்கு எதிரான வார்த்தை என்றால் நான் எங்களுடைய கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு அண்ணா அறிவாலயம் என்ற பெயரை வைத்திருக்க மாட்டேன். ஆகவே ஆலயம் என்ற சொல் எங்களுக்கு விரோதமான சொல் அல்ல.

சில பேர் கூட, என்ன ஆலயம் என்று பெயர் வைத்திருக்கிறீர்களே என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொன்ன பதில், நான் ஆலயம் என்ற சொல்லையே வெறுப்பவன் அல்ல என்பதுதான். ஆலயத்தில் தவறுகள் நடந்தால் அதைக் கண்டிப்பவன். தவறுகள் நடைபெறக்கூடாது என்று கருதுபவன்.

மனித சமுதாயத்திலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொள்கை உண்டு. எனக்கென்று ஒரு கொள்கை உண்டு. என்னுடைய கொள்கையை மற்றவர்கள் மீது நான் திணிக்க விரும்பவில்லை. எடுத்துச் சொல்லலாம். விளக்கலாம். ஏற்றுக் கொண்டால் மகிழலாம். ஏற்றுக்கொள்ளா விட்டால் அவர்கள் வழியிலே அவர்கள் செல்ல அனுமதிக்க வேண்டுமே தவிர, அதைத் தடுத்து நிறுத்துவது தகாது என்பது என்னுடைய கொள்கை. (பலத்த கைதட்டல்).

அந்தக் கொள்கையின் அடிப்படை யிலேதான் எந்தவொரு கருத்தையும் பிறர் மீது திணிக்கக் கூடாது என்பது எங்களுடைய இயக்கம் கொண்டிருக்கின்ற கொள்கையாகும். அந்தக் கொள்கையின் அடிப்படையிலே இயங்குகின்ற அரசுதான் என்னுடைய தலைமையிலே இயங்கு கின்ற அரசாகும்.

### ஓடாத திருவாரூர் தேரை ஓட்டிக்காட்டினேன்

இந்த அரசுக்கு ஆலயங்களை எல்லாம் அகற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்குமே யானால், இருபதாண்டுக் காலம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 47 முதல் 67 வரையில், திருவாரூர் தேர் ஓடாமலே இருந்தது. நான் முதலமைச்சராக ஆன பிறகுதான் ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓட்டிக் காட்டினேன். இன்னமும் அது ஓடிக் கொண்டிருக்கிறது.

நான் முதலமைச்சராக இருந்தபோதுதான் சென்னையிலே கபாலீஸ்வரர் கோவில் தெப்பக் குளம் தூர்ந்து கிடந்ததைத் தூர் வாருவதற்காக சீரணிப் படையோடு சென்று தூர் வாருகின்ற பணியைத் தொடங்கி வைத்திருக்கிறேன். எனவே ஆலயங்களின் காரியங்களை - அந்த ஆலயங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்ற பக்தர்களின் மனம் மகிழ்கின்ற அளவிற்கு நடைபெற வேண்டும் என்பதிலே எனக்கு மாறுபாடான கருத்து கிடையாது.

அதற்கெல்லாம் உச்சமாக இன்றைக்கு ஆலயங்கள் இப்படிப்பட்ட பணிகளைச் செய்கின்றன என்பதை எண்ணும் போது நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த மகிழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் அறநிலையத்துறையின் சார்பிலும் நம்முடைய ராமதாசு அடிகளார் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாகவும் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்ற 75 இணைகளுக்கான இந்தத் திருமணங்கள் தான் என்பதை எடுத்துக் கூறி - இன்றைக்கு நம் முன்னிலையிலே திருமணம் செய்து கொண்டுள்ள இந்த மணமக்கள் வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டுமென்று வாழ்த்தி உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

★ ★ ★

# அறந்தழைக்க அரும்பணிகள்

— திருமிகு. ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப.,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

### இந்து சமய அறநிலையத்துறையின் ஈராண்டுச் சாதனைகள்!

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உயரிய வழிகாட்டுதலில், மக்கள் நல மேம்பாட்டிற்காகப் பல வழிகளிலும் பாடுபட்டு வரும் சமுதாய நல நிலையங்களாக நம் திருக்கோவில்கள் திகழ்ந்து வருகின்றன.

### இலவசத் திருமணங்கள்

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய இந்து மக்களுக்குத் திருக்கோவில்களின் சார்பில் இலவசமாகத் திருமணம் நடத்திவைக்கும் திட்டம் சிறப்புறச் செயல்படுத்தப்படுகிறது.

இந்த இலவசத் திருமணத்திட்டத்தின் கீழ் 1996 டிசம்பர் முதல் இதுவரை மொத்தம் 988 இணைகளுக்கு தலா ரூ. 3,000 வீதம் ரூ. 29,64,000 செலவில் இலவசத் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டிருப்பது அறநிலையத்துறையின் மகத்தான சாதனையாகும்.

### திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வதை நடைமுறைப்படுத்துதல்

திருக்கோயில்களில் வடமொழியிலேயே அருச்சனை செய்யப்பட்டு வந்த நிலையில், அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்தும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புரையின் அடிப்படையிலும், திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு, இன்றைய நிலையில் 4,331 திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழில் அருச்சனை செய்வதை நெறிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி, தமிழகத் திருக் கோயில்களில் ஒரே மாதிரியான 108 தமிழ் அருச்சனை போற்றிகளைப் பயன்படுத்த குழுவின் பரிந்துரையின்படி தமிழ்த் திருமுறை நூல்களின் சொற்களைக் கொண்டு 108 போற்றிகள் தயாரித்து அச்சிடப்பட்டு வருகிறது. தமிழில் 2,326 இலட்சார்ச்சனைகளும், 14 கோடியருச்சனைகளும் நடத்தப்பட்டுள்ளன.

திருமுறைப் பதிகங்கள், திருப்பாவை, திருவெம்பாவை பாசுரங்கள், திருமுருகாற்றுப் படை, நாலாயிர திவ்யப்பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்களில் குறிப்பிட்ட பதிகங்கள் கல் வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுப் பதிக்கப்படுகின்றன.

ஒலிபெருக்கிக் கருவிகள் மூலம் பக்திப் பாடல்கள் காலை-மாலை வேளைகளில் 1517 திருக்கோயில்களில் ஒலிபரப்பப்படுகின்றன.

தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை, திருப்பாவை, திருக்குறள், நாலாயிர திவ்யப் பிரபந்தம் போன்ற நூல்களின் கருத்துக்களைத் தக்க சான்றோர்கள் - தமிழறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் 612 திருக்கோயில்களில் நடத்தப்படுகின்றன.

### தமிழ்ப் புலவர்கள் நியமனம்

தமிழகத் திருக்கோயில்களில், இந்து சமயக் கருத்துக்களைப் பரப்புதல், சமயப் பிரச்சாரம் செய்தல், தல வரலாறு தொகுத்தல், திருக்கோயில் வரலாறுகளைப் பற்றிப் பக்தர்களுக்குக் கூறி வழிகாட்டுதல், சமயத் திருமுறை நூல்களைப் பற்றி விரிவுரையாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் இதுவரை 133 தமிழ்ப் புலவர்கள் பணியமர்த்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 110 தமிழ்ப் புலவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்.

இவர்களுக்குத் தொகுப்பூதியமாக மாதந்தோறும் ரூ.1500 திருக்கோயில் நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது.

### ஒரு காலப் பூசைத்திட்டம்

நலிந்த நிலையில் உள்ள 1000 திருக்



அறந்தழைக்க அரும்பணிகள் ஆற்றிவரும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், அறநிலையத்துறைச் செயலர் திருமிகு. த.இரா. சீனிவாசன், இ.ஆ.ப., அவர்களுடனும், ஆணையாளர் திருமிகு. ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப., அவர்களுடனும் ஆலோசனை நடத்துகிறார்.

கோவில்களில் ஒரு காலப் பூசைத் திட்டத்தை அறநிலையத் துறை மிகுந்த ஈடுபாட்டுடன் செயல் படுத்தி வருகிறது.

பொதுமக்கள் தம் பங்காக ரூ. 2500 மட்டும் திரட்டித் தந்தால், எந்தத் திருக்கோவிலுக்காக அத்தொகை வழங்கப்பட்டதோ அந்தத் திருக் கோவிலுக்கு அறநிலையத்துறை தன் பங்காக ரூ.22500 செலுத்தி, அக்கூடுதல் தொகை ரூ.25000 அத்திருக் கோவிலின் பெயரில் நிரந்தர வைப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை ஒருகால பூசைக்காக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி, ஏற்கனவே 6260 திருக் கோவில்களுக்கு வைப்புநிதிகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. கடந்த ஆண்டில், 1000 திருக்கோயில் களுக்கும் வைப்புநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## கருணை இல்லம்

21 திருக்கோயில்களில், கருணை இல் லங்கள் (அன்பு இல்லம்) தொடங்கப்பட்டு, சுமார் 25 ஆண்டுகளில் 870 சிறுவர் மற்றும் சிறுமியர்கள் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளில், 22 திருக்கோயில் களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டு, 341 சிறுவர்-சிறுமியர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

கருணை இல்லச் சிறுவர் / சிறுமியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.600 வீதம் உணவு வகைக்கு செலவிடப்பட்டு வருகிறது. இதைத் தவிர உடைகள்/ உறைவிடம் / மருத்துவ உதவி / பாட நூல்கள் அளித்தல் ஆகியவை இலவசமாகத் திருக் கோயில் நிதி மூலம் செய்யப்படுகின்றன.

## தலவரலாறு வெளியிடுதல்

தமிழகத் திருக்கோயில்களின் தொன்மை மிக்க வரலாற்று விபரங்களை, பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், திருக்கோயில் களின் அருமை பெருமைகளை விளக்கும் தல வரலாறுகள் / தல புராணங்கள், பிள்ளைத் தமிழ், கலம்பகம் போன்றவை தயாரித்து வெளியிடுதல் திட்டத்தின் அடிப்படையில் 11-6-1998 அன்று மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு விழாவில் தமிழகத் திருக்கோயில்களுக்கான 504 தல வரலாறு களும், 7 தல புராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் நூல்களும், 2 கலம்பக நூல்களும் வெளியிடப் பட்டுள்ளன.

## ஓய்வூதியத் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள் / பட்டாச்சாரியார்கள் / ஓதுவார்கள் / வேத பாராயணர்கள் / இசைக் கலைஞர்கள் ஆகியோர் களுக்கு மாதம் ரூ. 350 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. 9-8-1996 முதல் ஓய்வூதியம் ரூ. 500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், தற்போது கூடுதல் 701 ஓய்வுபெற்ற பணியாளர்கள் ஓய்வூதியம் பெற்றுப் பயனடைகின்றனர்.

## திருக்கோயில் பணியாளர் நலன்

திருக்கோயில்களில் பணியாற்றும் ஊழியர் களின் நலனைப் பேணிக் காப்பதற்கும் அவர்களது ஊதியத்தைச்சீரமைப்பதற்கும் நால்வர் குழு அரசால் அமைக்கப்பட்டது. இக்குழு அரசிற்கு அளித்த அறிக்கையினைப் பரிசீலனை செய்து ஆலய ஊழியர் களுக்கு 13-4-98 அன்று அரசு பல சலுகைகளை அறிவித்துள்ளது. அவ்வறிவிப்பின்படி முதுநிலைத் திருக்கோயில் பணி யாளர்களுக்கு ரூ. 3.23 கோடி அளவிலும், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணி யாளர்களுக்கு ரூ. 5.73 கோடி அளவிலும் சலுகைகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழ் இசைப் பள்ளிகள்

இளைய தலைமுறையினருக்கு முறையாக தமிழிசையைக் கற்பிக்க 8 சைவத் திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட தேவார இசைப் பள்ளியில் 93 மாணவர்களும், 7 வைணவத் திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட திவ்வியப் பிரபந்த இசைப்பள்ளியில் 98 மாணவர்களும் சேர்ந்து பயன்பெறுகின்றனர். உள்ளூர் மாணவர்களுக்கு ரூ. 300 வீதமும், வெளியூர் மாணவர் களுக்கு ரூ. 600 வீதமும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

## நாதசுர இசைப் பயிற்சிப் பள்ளி

திருக்கோயில்களில் இசைக்கப்படும் இசைக் கருவிகளான நாதசுரம், தவில் போன்ற கருவிகளை முறையோடு பயில, 10 திருக்கோயில்களில் தொடங்கப் பட்ட நாதசுரம்/தவில் பயிற்சிப் பள்ளிகளில் 88 மாணவர்கள் சேர்ந்து நாதசுர இசையும், 50 மாண வர்கள் சேர்ந்து தவில் இசையும் பயின்று பயன் பெறுகின்றனர்.

## புத்தொளிப் பயிற்சித் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள்/ பட்டாச்சாரியர்கள்/ஓதுவார்கள்/கிராமக் கோயில் பூசாரிகள் மற்றும் இசைக்கலைஞர்களுக்கு பூசை முறைகளை ஆகம விதிகளின்படி செய்திட வகை செய்யும் புத்தொளிப் பயிற்சித் திட்டம் தகுந்த வல்லுநர்களைக் கொண்டு ஓராண்டுக் காலத்திற்கு 23 மையங்களில் தொடங்கப்பட்டு, 378 பயிற்சி யாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## நாதசுரம், தவில், தாளம் இசைக்குழு நியமனம்

நிதி வசதியற்ற புராதனமான திருக்கோயில் களில், நாதசுர மங்கள இசை மீண்டும் ஒலிக்கும் வகை யில், முதற்கட்டமாக 26 தொன்மையான திருக் கோயில்களில் நாதசுரம், தவில், தாளம் ஆகிய இசைக் குழு ஏற்படுத்தி, முறையே ரூ. 1000, ரூ. 750, ரூ. 500 வீதம் ஊதியம் வழங்கிட, ஆலய மேம்பாட்டு நிதி வட்டியிலிருந்து ஒரு கோடி ரூபாய் தனி முதலீடு செய்து, அதன்மூலம் பெறப்படும் வட்டித் தொகை யினை இத்திட்டத்திற்குப் பயன்படுத்த அரசு ஆணை பெறப்பட்டுள்ளது.

## திருக்கோயில் ஓவியங்கள், சிற்பங்கள், திருவிழாக்கள், ஒலி-ஒளி நாடா தயாரித்தல்

திருக்கோயில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள், நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பிற முக்கிய அம்சங்களை ஒலி, ஒளி நாடா மூலம் தயாரித்து நிரந்தர கலையம்சமாகப் பாதுகாத்திட முதற்கட்டமாக ஆறு முதுநிலைத் திருக்கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ. 1.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி-ஒளி நாடா தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள இத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில் களுக்கு நிதியுதவி வழங்குதல்

திருப்பணி - திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி மூலம் இத்துறை கட்டுப் பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் உள்ள 50 கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு, கோயில் ஒன்றுக்கு ரூ. 25,000 வீதம் ரூ. 1,25,0000க்கு அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## குடமுழுக்கு விழாக்கள்

தமிழகத்தில் உள்ள பாடல்பெற்ற, மங்களா சாசனம் செய்யப் பெற்ற, சரித்திர முக்கியத்துவம் வாய்க்கப் பெற்ற திருக்கோயில்களில் முதற் கட்டமாக 1000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குட முழுக்கு செய்யப்படும் என அரசால் அறிவிக்கப் பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்க 1996, 1997, 1998 மே மாதம் வரை 988 திருக் கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. 1993 முதல் 1995 முடிய மொத்தம் 435 திருக்கோயில்களில் மட்டுமே குட முழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளதை ஒப்பிட்டு நோக்கும்போது 1996 முதல் 1998 மே மாதம் வரையிலும் நடை பெற்ற குடமுழுக்கு விழாக்கள் மிகவும் அதிக மாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திருப்பணி மற்றும் இதர வேலைகள்

1996 முதல் 1998 மே மாதம் வரையிலும் மொத்தம் 1086 திருப்பணி மற்றும் இதர வேலைகள் நடைபெற்றுள்ளன. இவ்வேலை களுக்கு ரூ. 1580.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1993 முதல் 1995 வரையிலும் திருப்பணி மற்றும் இதர வேலைகள் எண்ணிக்கை 1145 மட்டும். இவ்வேலைகளுக்கு ரூ. 1263.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## கிராமக் கோவில் பூசாரிகள் ஓய்வூதியம்

அறநிலையக் கட்டுப்பாட்டில் இல்லாத, கிராமப்புறத்தில் உள்ள திருக்கோவில்களில் பணி புரிந்த ஓய்வுபெற்ற பூசாரிக்கு மாதம் ரூ. 500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 622 நபர்கள் பயன் பெறுகின்றனர்.

## சிறப்பு வழிபாடு

தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்தும் வகை யில் தமிழகத் திருக்கோவில்களில் ஆண்டுதோறும் விடுதலைநாள், அறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடு பொது விருந்து திருக்கோவில்களின் நிதியில் இருந்து நடத்தப் படுகிறது.

1997 ஆகஸ்ட் திங்கள் 15-ம் நாளிலிருந்து 31 ஆம் நாள் வரை தமிழகத் திருக்கோவில்களில் மொத்தம் 630180 பொதுமக்களுக்கு சுதந்திரத் திருநாள் பொன்விழா பொது விருந்து அளிக்கப் பட்டது. அதற்கு ரூ. [illegible]090.05 திருக்கோவில் நிதியில் இருந்து செலவு செய்யப்பட்டது.

## 1998-99 நடப்பு நிதியாண்டில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்

★ திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மற்றும் பார்வை மையத்திற்கு ரூ. 49.45 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டப் பட உள்ளது. நடப்பு ஆண்டில் இதற்காக ரூ.20 இலட்சம் செலவிடப்படும்.

★ புதியதாக உருவாக்கப்படவுள்ள, அரியலூர், திருவள்ளூர், நாமக்கல், கரூர், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்படவுள்ள 8 உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு, புதியதாக 8 மாருதி வேன்கள் ரூ. 29 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

★ தமிழ்நாட்டில் உள்ள 30,000 கல்வெட்டுக் களில் உள்ள குறிப்புகளை அச்சிட்டு புத்தக மாக வெளியிடப்பட உள்ளது. முதல் கட்டமாக, நடப்பு ஆண்டில் 10,000 கல் வெட்டுகளில் உள்ள குறிப்புகளை அச்சிட்டு புத்தகமாக வெளியிட ரூ. 8.25 இலட்சம் செலவிடப்படும்.

★ நிலை-3ல் 100 செயல் அலுவலர் பணி யிடங்கள் மற்றும் நிலை-4ல் 100 செயல் அலுவலர் பணியிடங்கள் ஆக மொத்தம் 200 பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படும். இதற்காக ஆகும் செலவு ரூ.114.17 இலட்ச மாகும்.

★ உதவி ஆணையர் நிலையில் உள்ள 7 திருக் கோயில் பணியிடங்களை துணை ஆணை யர் நிலைக்கும், செயல் அலுவலர் நிலை - 1ல் உள்ள 16 திருக்கோயில் பணியிடங்களை உதவி ஆணையர் நிலைக்கும், செயல் அலு வலர் நிலை - 2ல் உள்ள 7 திருக்கோயில் பணியிடங்களை செயல் அலுவலர் நிலை 1-க்கும், செயல் அலுவலர் நிலை 3ல் உள்ள 10

திருக்கோயில் பணியிடங்களை நிலை 2க்கும், செயல் அலுவலர் நிலை 4ல் உள்ள 8 திருக் கோயில் பணியிடங்களை செயல் அலுவலர் நிலை 3க்கும் நிலை உயர்வு செய்யப்படும். இதற்கு ஆகும் செலவினம் ரூ. 8.14 இலட்ச மாகும்.

★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் ஒரு புதிய கூடுதல் ஆணையர் பதவி ஏற்படுத்தப்படும். இதற்கு ஆகும் செல வினம் ரூ. 1.68 இலட்சமாகும்.

★ திருக்கோயில்களில் தணிக்கை நிலுவை களைக் குறைக்கப் புதியதாக 50 தணிக்கை ஆய்வர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதற்காக ஏற்படும் செலவினம் ரூ. 27.68 இலட்சமாகும்.

★ அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட் டோர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக் கோயில்களின் திருப்பணிக்காக 100 திருக் கோயில்களுக்கு ரூ. 12.50 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

★ இந்துசமய அறநியைத்துறையில் உள்ள 10 மண்டல இணை ஆணையர் அலுவலங்களில் ரூ. 10 இலட்சம் செலவில் 'கணிப்பொறி' வசதி செய்யப்படும்.

★ தற்போது ஆண்டுதோறும் திருக்கோயில் திருப்பணிக்காக வழங்கி வரும் அரசு மானியம் ரூ.45 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

★ பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்ற 50 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்படும்.

★ ரூ.2.40 இலட்சம் செலவில் மங்களாசாசனம் மற்றும் பிரசித்தி பெற்ற சரித்திரப் புகழ் வாய்ந்த 20 திருக்கோயில்களில் நாதசுரக் கலைஞர்கள் பணியிடம் ஏற்படுத்தப்படும்.

★ ரூ.21 இலட்சம் செலவில் 99 திருக்கோயில் களில் கூடுதலாக 100 ஓதுவார்கள் நியமனம் செய்யப்படுவர்.

★ 10 திருக்கோயில்களில் ஒலி-ஒளி நாடா தயார் செய்யப்படும். இதற்காகும் செலவு ரூ. 11 இலட்சமாகும்.

★ 1000 திருக்கோயில்களில் ஒருகால பூசை நிதியுதவித் திட்டம் கூடுதலாக ஏற்படுத்தப் படும். இது வகைக்கு ரூ.225 இலட்சம் செலவு ஏற்படும்.

★ திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்யப்படும்.

★ நகைகள் மதிப்பீட்டிற்கு உயர்மட்டக்குழு ஏற்படுத்தப்படும்.

★ திருக்கோயில்களில் வழிபடுவோர் தங்கு வதற்காக 50 தங்கும் விடுதிகள் கட்டப்பட வுள்ளன.

★ ரூ. 3.10 இலட்சம் செலவில் சைவத் திரு முறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்யப் பிரபந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்தப்படும்.

★ புதிதாக காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம், கடலூர் ஆகிய இடங்களில் உற்சவ விக்கிரங்கள் பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்கு பகுதி-2 திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த வகைக்கு ரூ.20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

மேற்கண்ட, 20 திட்டங்களுக்கும் மொத்தம் ரூ. 588.92 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

★ ★ ★

# சைவமும் பெரியபுராணமும்

— பேராசிரியர் முனைவர் இரா. செல்வகணபதி,
எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,
மயிலாடுதுறை

## முன்னுரை

தமிழகத்தின் தொன்மைச் சமயங்களுள் ஒன்று சைவம். இச்சமயத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றினோர் பலர். சைவம் குறிக்கத்தக்க வரையறைகளுடன்சமயமாக உருப்பெற[1] உதவிய அருள் நூல்கள் பல. இவற்றைத் தோத்திரங்கள் என்றும், சாத்திரங்கள் என்றும் பகுப்பர். தோத்திரங்கள் பன்னிரண்டு; இவற்றைச் சைவத்திருமுறைகள் என்பர். சாத்திரங்கள் பதினான்கு: இவற்றைச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் என்றும், மெய்கண்ட நூல்கள் என்றும் கூறுவர்.[2] சைவத்திருமுறைகளுள் பன்னிரெண்டாவது திருமுறையாக வைத்து எண்ணப் படுவது சேக்கிழார்இயற்றிய திருத்தொண்டர்புராணம் என்னும் பெரிய புராணம். சைவ சமய வரலாறு, மற்றும் வளர்ச்சியில் பெரியபுராணம் பதித்த அடிச்சுவடுகளையும், ஆற்றிய தொண்டுகளையும் பகுப்பாய்வு செய்து வழங்கும் நோக்கில் இக்கட்டுரை நடையிடுகின்றது.

## ஆய்வு எல்லை

'தமிழகத்தில் சைவம்' என்ற பொதுத் தலைப்பில் 'சைவமும் பெரியபுராணமும்' என்ற இக்கட்டுரை அமைகின்றது. பெரியபுராணத்தின் துணைகொண்டு தமிழகத்தில் சைவ சமயம் புத்துயிர் பெற்று எழுச்சியோடு வளர்ந்த வரலாற்றை விரிவாக ஆராய்தல் கூடும்.[3] என்றாலும் இக்கருத்தரங்கக் கட்டுரைத் தொடரில் 1) தமிழகத்தில் சைவ சமயத்தின் தோற்றமும், 2) சைவசமயவளர்ச்சியில் நால்வர் பங்கு, 3) சைவமும், சைவசித்தாந்த நூல்களும் என்ற தலைப்புகளுள் வேறு மூன்று தொடர்புடைய கட்டுரைகள் வழங்கப்பட உள்ளன. எனவே, 'சைவமும், பெரிய புராணமும்' என்ற தலைப்பின் எல்லையைச் சுருக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. சைவ சமய வளர்ச்சிக்கு மூவர் முதலிகள் இயற்றிய அருந்தொண்டுகளை விரித்துரைக்கும் முதல் நூல் பெரியபுராணமே ஆகும். சைவ சித்தாந்த சாத்திரங்கள் உருப்பெற, மூவர் முதலிகளின் கருத்துகளைத் திரட்டித் தெளிவுபட வழங்கிய பெருமையும் இதற்கே உரியது[4] எனவே, தனித்து ஆராயப் பெறும் இவ்விரு கட்டுரைகளையும் கருத்திற் கொண்டு, சைவமும், பெரியபுராணமும் என்ற இக்கட்டுரை குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்டதாய் வடிக்கப்பெற்றுள்ளது.

## ஆய்வுப்பொருள்

தலையாய இரண்டு செய்திகளை இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கிறது. 1) சைவ சமயத் தோத்திரங்கள் பலவும் சிவபரம்பொருளைக் குறித்த பாமாலைகளாகவும், சிற்றிலக்கியங்களாகவும் அமைந்திருக்கப் பெரியபுராணம் சிவன் அடியவர்களைப் போற்றிய பெருங்காப்பியமாக அமைக்கப் பெற்றமை. 2. அடியவர்களைப் போற்றிய பெரிய புராணத்தின் தோற்றத்தால் சைவ சமயமும், சமயஞ் சார்ந்த சமுதாயமும் பெற்ற நன்மைகள். முன்னையது சுருக்கமாகவும், பின்னையது சற்று விரிவாகவும் ஆராயப்பட்டுள்ளன.

---

1. 'சமயம் என்பது ஒரு குறிப்பிட்ட வழிபடு தெய்வத்தைப் பற்றியும், அதனைத் தொழ வேண்டிய முறைபற்றியும், தொழுவார் செய்யத்தக்கன. செய்யத்தாகாதன. தொழுதால் பெறுவன முதலியனபற்றியும் கூறுவது. தத்துவம் என்பது சமயத்தின் உட்பிரிவு. குறிப்பிட்ட சமயத்தில் குறிக்கப்படும் இறைவனுக்கும், அவனால் படைக்கப்பட்ட உயிரினத்திற்கும் இடைத்தொடர்பு, ஒற்றுமை, வேற்றுமை இரண்டையும் இணைக்க முயலும் கருத்துக்கள், இரண்டின் இயல்புகள் முதலியன பற்றிய விரிவான ஆனால் நுட்பமான ஆராய்ச்சியேயாகும்.

'மாணிக்க வாசகம். இரா. டாக்டர். திருமந்திர ஆராய்ச்சி'. பக்கம் 236.

2. செல்வகணபதி இரா.டாக்டர் 'தருமபர ஆதினமும் தமிழும்' பக்கம் 34.

3. 'தமிழ்நாட்டில் ஒரு தனி புராணம் உலவுகிறது. அது திருத்தொண்டர் புராணம் என்பது அதற்குப் பெரியபுராணம் என்றொரு பெயரும் வழங்கப்படுகின்றது. அதைத் தமிழ்நாட்டு வரலாற்றுப் புராணம் என்றுஞ் சாற்றலாம்.

கலியாணசுந்தரனார். திரு.வி.'பெரியபுராண ஆராய்ச்சி' அணிந்துரை. பக்கம்.3.

4. முருகவேள். ந.ரா.புலவர். 'பெரியபுராணச் சொற்பொழிவுகள்' சேக்கிழாரும் சைவச்சித்தாந்தமும் பக்கம். 323.

இவ்விரு வகைப் பகுப்பாய்வினைத் தொடங்கு முன், பெரியபுராணம் தொடர்பான சில செய்திகளை நினைவு கூருதல் இன்றியமையாதது. பெரியபுராணம் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற ஒரு பெருங் காப்பியம். சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையுள் குறித்த அறுபது தனி அடியார்களுடன், சுந்தரரின் தாய் தந்தையாராகிய இசைஞானியார், சடையனார் ஆகிய இருவரையும், தொகை பாடிய ஆசிரியராகிய சுந்தரரையும் சேர்த்து அறுபத்து மூன்று தனி அடியார் களையும், ஒன்பது தொகை அடியார்களையும் சிறப் பித்துச் சேக்கிழார் இதனை இயற்றினார். 4286 செய்யுட் களால் இயன்ற நூல் பெரியபுராணம்[5] தமிழகத்தில் சைவசமயம் பற்றிப் பாடப்பெற்ற முதல் காப்பியம் இதுவே ஆகும். பெரியபுராணம், இதற்கு முன் தோன்றிய பதினொரு திருமுறைகள், தில்லை வுலாப் போன்ற பிறநூல்கள், வழக்கில் அக்காலத்தில் நிலவிய செவிவழிச் செய்திகள், சமணம், பௌத்தம் போன்ற பிற சமயநூல்கள், நாயன்மார் பற்றிய கல்வெட்டுக் கள் - சிற்பங்கள் - ஓவியங்கள் முதலியவற்றை அகச் சான்றுகளாகக் கொண்டு இயற்றப்பெற்றுள்ளது.

பெரியபுராணம் முதல் நூல்.[6] மொழி பெயர்ப்பு நூல் அன்று. கி.பி,300 முதல் 900 வரை வாழ்ந்திருந்த நாயன்மார்களைப் பற்றிய வரலாறு இது. பல நாயன்மார்களின்[7] பிறப்பிடம், சாதி, தொண்டு முதலிய செய்திகளை நூற்சான்றுகளை மட்டும் மேற்கோளாகக் கொண்டு நிறுவ முயலாது, பெரியபுராண ஆசிரியர் நாடெங்கும் பயணம் செய்து அரிய செய்திகளைப் பலரிடமும் கேட்டறிந்தே இந்நூலில் நாயன்மார் வரலாறுகளை வடித்துள்ளார். திருஞானசம்பந்தர் காலத்து, நின்ற சீர்நெடுமாறனையும் [8] திருநாவுக்கரசு காலத்து, முதல் மகேந்திர வர்மனையும்[9], சிறு தொண்டர் வரலாற்றில், வாதாபிப் படையெடுப் பையும்[10] பெரியபுராணம் ஆதாரங்களோடு வழங்கி இராவிடின் நாயன்மார் கால ஆய்வு நிறைவு பெற்றிராது.

பெரியபுராணத்தில் பல்வேறு சாதிகளைச் சார்ந்த நாயன்மார் வரலாறுகள் இடம்பெற்றுள்ளன. இவர்தம் பழக்க வழக்கங்கள், வாழ்க்கைமுறை, தொண்டுகள் முதலியனவும்; அக்காலத்தில் நிலவிய நாடு நகர அமைப்புக்கள், ஆட்சிமுறை முதலியவை களையும் இந்நூல் விரிவாகக் குறிக்கின்றது. ஆராய்ச்சி அறிஞர் மா.இராசமாணிக்கனார் கூறுவதுபோல் ''ஒரு பக்கம் பல்லவர்கால வரலாற்றையும், மற்றொரு பக்கம் சோழர் கால நாட்டு நிலையையும், மொழி நிலையையும், சைவ சமய நிலையையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள இந்நூல், தமிழர் நற்பேற்றின் பயனாய்த் தோன்றியது எனில் மிகையன்று. இந்நூலிலிருந்து சேக்கிழாருடைய இலக்கியப் புலமை, இலக்கணப் புலமை, திருமுறைப்புலமை, இசை, நடனம், மருத்துவம், வானநூல் முதலிய பல்கலைப்புலமை, சைவசித்தாந்த அறிவு முதலியனவற்றை நன்கு அறியலாம்''.[11]

### சங்க இலக்கியங்களில் சைவம்

பெரிபுராணம் தொடர்பான சிறு அறிமுகத் தொகுப்பை அடுத்து, இக்கட்டுரையின் முதல் ஆய்வு பொருளாகிய 'அடியவர்களை மையமாக வைத்துப் பெரியபுராணம் இயற்றப் பெற்றது ஏன்' என்பதற்கான அடிப்படைச்சான்றுகளை நிரலே காணுதல் இன்றி யமையாதது. சங்க இலக்கியங்களின் உள்ளீடு அகம், புறம் என இரண்டுமே. இவ்விரு பாடுபொருட் களின் எல்லைகளை விரித்துரைக்கும் நோக்கிலேயே தொல்காப்பியப் பொருளாதிகாரம் விரிந்தது. கடைச் சங்க இலக்கியங்கள் என்று போற்றப் பெறும் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் அகம் மற்றும் புறப் பொருட்களை மையமாகக் கொண்டே பாடப் பெற்றுள்ளன. பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப் படையும், எட்டுத்தொகையுள் பரிபாடலும் தவிர எஞ்சிய கடைச்சங்க இலக்கியங்கள் மனிதனை மையப்பொருளாகக் கொண்டு பாடப்பெற்றவை. மானுடக் காதலும், வீரமுமே சங்க இலக்கியங்களில் உள்ளீடுகள். இங்கே முருகன்[13], திருமால்[13] கானமர்ச்

---

5. இப்பாடல் தொகை, சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் 1950ல் வெளியிட்ட பெரியபுராணம் - மூலம் - மூன்றாம் பதிப்பில் காணப்படுவது. திருத்தொண்டர்புராண வரலாறு பாடல்தொகை 4253 என வரையறுத்துள்ளது. பாடல்.53.

6. அருணாசலம் .மு.'தமிழ் இலக்கிய வரலாறு' பன்னிரண்டாம் நூற்றாண்டு பக்கம் 166.

7. பெரியபுராணம் ஏறத்தாழ கி.பி.300 முதல் 900 வரை இருந்த நாயன்மார்களைப் பற்றிய வரலாறு. நாயன்மாரே வடக்கே காம்பீலிலிருந்து தெற்கே மதுரை வரை பல நாடுகளில் வாழ்ந்தவர்;

இராசமாணிக்கனார். மா.டாக்டர். 'சைவசமயம்' பக்கம் 114.

8. பெரியபுராணம் - பாடல் 2750.

9. ஷை - பாடல் 1416.

10. ஷை - பாடல் 3670.

11. இராசமாணிக்கனார். மா.டாக்டர். 'சைவ சமய வளர்ச்சி' பக்கம் 251.

12. தொல். அகத். 5. மலை. 493. திருமுருகு. 269. புறம் 120, 125. அகம் 266. மதுரை. 181. குறு. 362. பதிற். 26. ஐங். 245. பெரும்பாண். 75.

13. தொல். அகத். 5. மதுரை. 95. முல்லை. 3. புறம். 56. பரி. 1, 2, 3, 4, 13, 15.

செல்வி[14], கொற்றவை[15], பலராமன்[16], இந்திரன்[17] வருணன்[18], பிரமன்[19] முதலிய கடவுள்களைப் பற்றிய குறிப்புகள் உண்டு. மானுடர் கொடை, புகழ், வீரம் முதலிய உயர் பண்புகளுக்கு இக்கடவுளர் உவமை கூறப்பட்டுளனரேயன்றி, இவர்களே சங்க இலக்கியங்களின் மையப்பொருளாக - பாடுபொருளாக இருந்திலர் என்பது நினைவு கூரத்தக்கது.

சங்ககால மக்கள் வழிபாட்டில் முதலிடம் பெற்றிருந்தது சிவ வழிபாடு. சிவன் என்னும் வெளிப்படையான பெயர்க்குறிப்புத் தொல்காப்பியத்திலோ அன்றிச் சங்க நூல்களிலோ இல்லை. எனினும், சிவனைக் குறிக்கும் சொற்றொடர்கள் பல இவற்றிடையே காணப்படுகின்றன.[20] முக்கட் செல்வன்[21], கறைமிடற்று அண்ணல்[22], தாழ்ச்சடையன்[23], கொன்றைமாலை அணிந்தோன்[24], உமைபாதி கொண்டவன்[25], முப்புரம் எரித்தவன்[26], ஆலமர்ச் செல்வன்[27], கங்கை தாங்கியவன்[28], என்றாற்போல் வருவன பல. 'சைவம்' என்ற சொல்லே முதன்முதல் மணிமேகலையில்தான் எடுத்தாளப்பட்டுள்ளது.[29] எனினும் தொல்காப்பியம் மற்றும் எட்டுத் தொகை நூல்களுள் 'கடவுள்' என்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள் சிவப் பரம்பொருளே என அறிஞர் குறித்துள்ளனர்[30]. என்றாலும், சிவப் பரம்பொருளும், நீலமணிமிடற்று ஒருவன்போல மன்னுக பெரும[31] என மன்னன் ஒருவனை வாழ்த்தும் வாழ்த்தில் உவமப் பொருளாகவும் 'பணியிய ரத்தை நின் குடையே முனிவர் முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே'[32] என மன்னவனின் வழிபடு பொருளாகவுமே இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்கள் என்று ஒரு சிலரால் கருதப்படும் கீழ்க்கணக்கு நூல்களும் மக்கள் பின்பற்றத் தக்க அறநெறிகளையே கூறுகின்றன. சங்கம் மருவிய காலத்தில் எழுந்த இரட்டைக் காப்பியங்களும் மானுடப் பெண்மையையே மையப் பொருளாகக் கொண்டு எழுந்தன. இவற்றால் உணரத்தக்க உண்மை ஒன்று உண்டு. தமிழகத்தின் பொற்காலம் என்று போற்றப் பெறும் சங்க காலத்தில் எழுந்த இலக்கியங்கள் மனிதனையே மையப்பொருளாகக் கொண்டு, மனித முயற்சிகள், வெற்றிகள், வாழ்க்கைச்சிறப்புகள், பண்பாட்டுக்கூறுகள் முதலியனவற்றையே சிறப்பித்துப் பாடின. அதனால், மானுட இனம் மகத்தான உயர்ச்சி பெற்று சிறந்து விளங்கிற்று.

சங்க காலத்திற்கும், பல்லவர் காலத்திற்கும் இடையே நிலவிய காலப் பகுதியை இருண்ட காலம் என வரலாற்று அறிஞர் குறிப்பர். கி.பி.4, 5, 6 நூற்றாண்டுகளில் தமிழகத்தை ஆண்ட மன்னர் பரம்பரை, மற்றும் சமுதாய நிலைப்பற்றி தெளிவான செய்திகள் கிடைத்தில, ஆயினும், கி.பி,7ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் பாண்டிய நாடும், பல்லவநாடும் சமண, பௌத்த மதங்களின் ஆதிக்கத்தில் நிலவியமை தெளிவாகத் தெரிகிறது. சமயக் கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு, அவை காரணமாக முரண்படாது, கடவுள் வழிபாட்டு நெறி நின்ற தமிழர் வாழ்வில் சமண - பௌத்தங்களின் தாக்கங்களால் சமயப்பூசலும், அமைதியின்மையும் நிலவத்தொடங்கின. வேத வழிபட்ட வைதிக நெறியும் ஒருபக்கம் போராட்டத்தில் ஈடுபட்டது. இத்தகு காலப்பகுதியிலேயே திருஞானசம்பந்தர், மற்றும் திருநாவுக்கரசர் ஆகிய இரு அருளாளர்களின் அவதாரம் நிகழ்ந்தது.

### சைவசமய எழுச்சி

தமிழகத்தின் வடபகுதியில் பல்லவ நாட்டைச் சமணத்திலிருந்து மீட்ட பெருமை திருநாவுக்கரசரையே சாரும். பாண்டிய நாட்டில் சமணத்தை வீழ்த்திய பெருமை திருஞான சம்பந்தருக்கு உரியது. கடவுள் மறுப்புக் கொள்கையை மேற்கொண்டிருந்த புறச்சமயங்களாகிய சமண பௌத்தங்களை வீழ்த்த இவ்விரு அருளாளர்களும் கடவுளுக்கு முதன்மை நல்கித் தங்கள் பக்தி இயக்கத்தை வளர்த்தனர். சிவப் பரம்பொருளே இவ்விரு அருளாளர்களின் எண்ணற்ற அருட் கவிதைகளின் பாடு பொருளாக அமைந்தது. சிவனும், சிவனைப்

---

14. அகம். 345, நெடு. 168.
15. தொல்.புறத்.59. திருமுருகு. 258. பரி. 11.
16. புறம். 56, 58. கலி.104.
17. புறம். 241. ஐங். 62.
18. பட்டினப். 89.
19. புறம். 194. பெரும்பாண். 402.
20. மாணிக்கவாசகம். இரா. டாக்டர். 'திருமந்திர ஆராய்ச்சி' பக்கம் 22 ,
21. புறம். 6, 55. அகம். 181, திருமுருகு. 153. கலி. 2, 104.
22. புறம் 1, 6, 55
23. புறம் 1,
24. புறம். 1, கலி. 150.
25. திருமுருகு. 153. ஐங். 2.
26. புறம் 55
27. கலி 8., 83. திருமுருகு. 256.
28. பரி 4.
29. 'என்றவன் தன்னைவிட்டு இறைவன் ஈசன் என நின்ற சைவ வாதி நேர்படுதலும்' மணிமேகலை 27 - 86, 87.
30. துரைச்சாமிப்பிள்ளை. ஔவை. சு. 'ஞானமிர்த மூலமும் - பழைய உரையும். முன்னுரை பக்கம் 1.
31. புறம். 91.
32. புறம். 6.

பற்றிய வேத, ஆகம, புராண, இதிகாசச் செய்திகளும், சிவனின் அட்ட வீரட்டச் செயல்களும், இருபத்தைந்து சிவ மூர்த்தங்களும், சிவனொடு தொடர்புடைய தமிழ் மக்கள் மத்தியில் வழங்கி வந்த சமயஞ் சார்ந்த கதைகளும், சைவ சாதனங்களும், சைவ சித்தாந்தக் கூறுகளுமே இவ்விரு கவிதைகளின் பாடுபொருளாக அமைந்தன. சங்ககாலத்தில் கவிதையின் பாடுபொருளாக இருந்த மனிதன், சமயப் போராட்டங்களுக்குப் பின் தோற்றங் கொண்ட சைவ சமய எழுச்சிக் காலத்தில், பின்னுக்குத்தள்ளப் பெற்று, கடவுளர்கள் அவ்விடத்தை நிறைவித்துக் கொண்ட உண்மையை இலக்கிய வரலாற்றில் இனம் காணுதல் பெரிதும் பயன் தருவது ஆகும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இரு அருளாளர்களின் வருகைக்குப் பின் தமிழகத்தில் சைவம் மாபெரும் எழுச்சிப் பெற்றது. பாடல் பெற்ற தலங்கள் மதிப்புப்பெற்றன. பல்லவர்களாலும், அடுத்து வந்த சோழர்களாலும் தெற்கே பாண்டியர்களாலும் தமிழகத்துக் கோயிலகள் பலவும் கற்றளிகளாகக் கலை அழகோடு உருப்பெற்றன. ஆகமச் செல்வாக்கில் திருக்கோயில் பூசைகளும், திருவிழாக்களும் சிறந்தன. சமயம், சிறப்பாக சைவம்-தமிழகத்தில் பெரிதும் மேன்மை பெற்றுச் சிறந்தது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் சேக்கிழாரின் பெரியபுராணக் காலமாகிய கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை[33] சைவம் தமிழகத்தில் கொடிகட்டிப் பறந்தது.

## ஐந்நூறு ஆண்டுகள் இடைவெளி

ஒரு செய்தியை நடு நிலைமையோடு சிந்தித்தல் நம் கடமையாகிறது. இறைவன் கோயில், திருவிழா, தத்துவம் என இவையாவும் மனித ஈடேற்றத்திற்கும், மனித குலவாழ்விற்கும் உதவுவதாகவே அமைதல் வேண்டும். இவற்றிற்கு அளவற்ற முதன்மை தரப்படும்போது 'மனிதனுக்குச் சமயம்' என்றநிலை மாறி 'சமயத்திற்காக மனிதன்' என்ற நிலை உருப்பெற்று விடுதல் இயற்கையே. கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல், சேக்கிழாரின் பெரிய புராணம் தோற்றம் கொண்ட காலம் வரையில் ஆன 500 ஆண்டுக்காலத்தில், குறிப்பிட்டுச் சொல்லத்தக்க, எந்த ஒரு இலக்கியமும் மனிதனை மையப் பொருளாகக் கொண்டு எழவில்லை என்பது நினைவு கூரத்தக்கது.

## மானிட இலக்கியம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்ட 500 ஆண்டு இடைவெளியில் சைவ, வைணவச் சார்புடைய எண்ணற்ற தெய்வக் கவிதைகளே சிறப்பிடம் பெற்றன. இடையிடையே மனிதர்களைப் பாட வந்தசிலரும் இறைவனின் மானிட அவதாரத்தைப் பாடினர். அல்லது, மனிதனை இறைவனாகப் பாடினர். மனிதனை மனிதனாகவே நிறுத்தி, அவனது வெற்றி, கொடை, புகழ், பண்பாடு, அறிவு, நல்லொழுக்கம் இவற்றிற்கு ஒளியூட்டிப்பாடும் முயற்சி தமிழ்க் கவிஞர்களிடையே அரும்பாமை வியப்பாக்குகின்றது. அவதார இராமனையும், வடபுலத்து சமண சமயச்சீவகனையும் காப்பியமாக்கினார். கலிங்க வெற்றிப்பெற்ற வேந்தனைத் திருமாலாக்கி மகிழ்ந்தனர். ஆண்டவன் மேல் பாடப்பெற்ற உலா இலக்கியத்தை அரசர்கள் மேல் ஏற்றி மனம் நிறைந்தனர். இந்த 500 ஆண்டு கால இலக்கியத் தேக்கத்தைத் தகர்த்து மனிதனை மையப் பொருளாகக் கொண்டு இறைமைக் கொள்கையோடு முரண்படாது மனிதனை முன் னிறுத்தி மகத்தான திருப்புமுனை விளைத்த 'மானிட இலக்கியம்' சேக்கிழாரின் பெரியபுராணம்.

## திருத்தொண்டர் புராண வரலாறு.

சிந்தாமணி மேல்கொண்ட சோழ மன்னனின் விருப்பத்தை மாற்ற எழுந்த காப்பியம் பெரியபுராணம் என்பது 'திருத்தொண்டர்புராண வரலாறு' கூறும் செய்தி. பெரியபுராணத்தோற்றத்திற்கு இதுவும் ஓர் காரணம் என கொள்ளலாகுமேயன்றி, இதுவே காரணம் என ஏற்பதற்கில்லை. இது கூட, சமய நோக்கில் அமைந்த ஒரு காரணமேயன்றிச் சமுதாயம் மற்றும் இலக்கிய வரலாற்று நோக்கில் அமைந்ததாகாது. எழுதி வைக்கப்பெற்றன யாவும் உண்மை என்றும், அவையே சிறந்த ஆதாரங்கள் என்றும் கருதும் கருத்து தமிழ் இலக்கிய வரலாற்று உலகில் ஆரோக்கியமானதாக இருக்கமுடியாது. தமிழ் இலக்கியங்கள் பலவற்றின் தோற்றம் பற்றி எழுந்த பாயிரங்களும் கதைகளும் உண்மைக்கு மாறானவை என்பது குறிப்பிடத்தக்கது.

## சமுதாய இணக்கமின்மை

சைவ சமயம் மகத்தான செல்வாக்குப் பெற்றிருந்ததை முன்னே குறித்தோம். சேக்கிழாரின் பெரிய புராணத் துணைக்கொண்டு ஆய்ந்தால் சைவ சமயம் மேலோங்கி இருந்ததேயன்றிச் சமூக இணக்கம் மேலோங்கி இருந்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. சாதியும், சாதியால் வந்த ஏற்றத் தாழ்வுகளும் வேண்டிய அளவு தலை விரித்தாடியே நின்றுள்ளன. சிவனைத் தலைவனாக ஏற்றும், தில்லை அம்பலவன்திருக்கோயிலுக்குள் புகமுடியாத நந்தனை அங்கே காணமுடிகிறது. அந்தணர் திருநீலநக்கர் இல்லத்துக்குள் பறையர் குலத்து வந்த திருநீலகண்ட

---

33. 'இவர் காலம் 1133 முதல் 1150 வரை ஆண்ட இரண்டாம் குலோத்துங்க சோழன் காலமே மிகவும் திட்டமாய்த் தெரிந்த செய்தி' அருணாசலம்.மு. 'தமிழிலக்கிய வரலாறு' பன்னிரண்டாம் நூற்றாண்டு பக்கம் 122.

**உங்களுக்குத் தெரியுமா?**

திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ள வைணவத் திருத்தலம் ஒன்று இமயத்தின் அடிவாரத்தில் உள்ளது. அது எந்தத் திருத்தலம் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதற்கான விடையை பக். 32இல் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணருக்கு இடம் ஒதுக்குவதில் முறையான விருப்பம் இருந்திருக்கவில்லை என்று அறிய முடிகிறது. சாத்திரம் பல பேசும் சழக்கர்கள் பலரும் கோத்திரமும், குலமும் கொண்டு சாதனை நிகழ்த்த விரும்பிய விருப்பம் அப்பரடிகளாலேயே கண்டிக்கப்படுகிறது. கங்கைவார் சடைக்கரந்தாருக்கு அன்பராகில் அவரை நாம் வணங்குவோம் என்று அருளாளர்கள் பாடினும், ஆவுரித்துத் தின்பவர், புலையர்களாகவே கருதப் பெற்றமைக்குச் சான்றுகள் இல்லாமல் இல்லை.

### நம்பிக்கையூட்டும் முயற்சி

சாதிகளால் மட்டுமின்றி, வருணாசிரம தருமங்களும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் தமிழ்ச் சமுதாயத்தை ஆட்டிப்படைத்தமை நன்கு அறிய வருகின்றன. கலிக்கம்பர் மனைவியார் வேலையாள் அடியவராய்த் திரும்பியபோதும் அவர் திருவடிகளில் நீர் வார்க்கத் தயக்கம் காட்டிய நிலைமை காணப்படுகிறது. சிவன் அடியார் பலர் செல்வர் வளமனை நாடிச் சென்று உணவு பெற்று பசி ஆறியமைக்குச் சான்றுகள் உள்ளன. தாம் தாம் செய்யும் நெறிமுறைகளே ஆசாரம் என்று கருதும் எண்ணம் நிலவியமை கண்ணப்பர் வரலாற்றில் காணக் கிடக்கிறது. இம்மை வாழ்வைக் கடந்த மறுமை வாழ்வின் ஈடேற்றத்தில் தமிழகத்தில் பக்தி வெள்ளம் கரை புரண்டு ஓடிய காலத்தில், 'இம்மையில் வாழ் வாங்கு வாழ்தலே சமயம்', 'அதுவே வீடுபேற்றின் வாயில்' என சமயநெறி நின்று மக்களை இம்மை வாழ்வில் நம்பிக்கையூட்டி நெறிப்படுத்த முயன்ற முதன் முயற்சிகளைப் பெரியபுராணத்தில் தரிசிக்க முடிகின்றது.

### மனித குல நேயமும் சமயமும்

மானுட இலக்கியம் பாட முனைந்த சேக்கிழார் சமயஞ்சார்ந்த அருளாளர்களை வரையறுத்துக் கொண்டது அருமைப்பாடு மிக்கது. மனிதர்களை ஒருங்கிணைப்பதற்குரிய பல்வேறு சமூக அமைப்புகள் உண்டு. உறவு, சாதி, மொழி வழிப்பட்ட இனம், சமயம் என்பன அவை. இவை மனிதர்களை ஒருங்கிணைப்பதில் ஒன்றிலொன்று முறையே சிறந்து நிற்பன. மனித குலத்தை - மனித நேயத்தை - மனித குல ஈடேற்றத்தை - மனித குல இணக்கத்தை உருவாக்குவதால் சமயமே மிகப் பெரிய வட்டம் என்பதைப் பெரிய புராண ஆசிரியர் நன்கு உணர்ந்திருந்தமை தெளிவாகிறது. தனது மானுட இலக்கியத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத்தொகையைத் தேர்ந்து கொண்டமையில் இவ்வெண்ணம் நன்கு புலனாகிறது.

### தீதிலாத் திருத்தொண்டத் தொகை

திருஞான சம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் வருகையால் சமண - பௌத்தங்கள் குன்றிச் சைவம் தழைத்தோங்கி நின்றமை மேலே சுட்டப்பெற்றன. பக்திவெள்ளம் கரைபுரண்டு ஓடி, சைவம் மாபெரும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் இவ்விரு அருளாளர்களையும் அடுத்து ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் அவதரித்தவர் சுந்தரர். இவரும் 'அர்ச்சனை பாட்டேயாகும்' ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்று இறைவன் வேண்ட இறைவனையே பாடித் துதித்துப்பக்தி இயக்கத்திற்கு மேலும் அரண் செய்தனர். இவர் பாடிய பதிகங்களுள் ஒன்று 'திருத்தொண்டத் தொகை' சேக்கிழார் தாம் பாட முயன்ற மானுட இலக்கியத்திற்கு அடிப்படையான திருத்தொண்டர் தொகைபற்றி சுந்தரர் வரலாற்றில் கூறும் சில வரிகள் நின்று நினைக்கத்தக்கன. சுந்தரர், கயிலாயத்தில் அம்மையின் சேடியராய அனிந்திதை, கமலினி என்ற இரு மாதர் மேல் காதல் கொண்டதற்கான காரணத்தை விளக்க வந்த சேக்கிழார்,

'மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத தொகை தரப்
போதுவார் அவர் மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்'

எனப்பாடுகிறார். இப்பாடலில் இரண்டு உண்மைகள் கொள்ளத்தக்கன. 1. சுந்தரர் வருகையின் உண்மை நோக்கம் திருத்தொண்டத் தொகை அருளுதற்கே 2. திருத்தொண்டர் வரலாறு விரிக்கப்பெறும் நாளே தென்திசை உண்மையாக வாழ்வு பெற்ற நாளாகும் என்பன அவை. சைவ சமயம் மகத்தான செல்வாக்குப் பெற்றிருந்தும், மண்ணின் மைந்தர்களாகிய அடியவர் வரலாறு விளக்கமுறாதவரை தென்திசை வாழ்ந்ததாக கருத இயலாது என்று கருதிய சேக்கிழார் திருவுளம் பெரியபுராணத்தோற்றத்தின் அடிப்படையை நன்கு விளக்குகின்றது. சண்டேசநாயனார் புராணத்தின் இறுதியில் 'தேசம் உய்யத் திருத்தொண்டத்தொகை முன் பணித்த திருவாளன்' என இதனைச் சேக்கிழார் உறுதி செய்கிறார்.

*(தொடரும்)*

★ ★ ★

# குமரகுருபரர் திருவுள்ளம்

— முனைவர் த. அமிர்தலிங்கம்

கவி இராஜசிங்கம் எனவும், தவராஜசிங்கம் எனவும் போற்றப்படும் நம் குமர குருபர சுவாமிகள் திக்கெல்லாம் போற்றும் திருநெல்வேலி மாவட்டத் திலே தோன்றியவர் ஆவர். இவர் பிறந்த திருவிடத்தின் பெருமையை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் தாம் பாடிய குமரகுருபரர் சரித்திரம் என்னும் நூலில்

**''செந்தமிழும் சந்தனமும் திசையெல்லாம்**
**பரிமளிக்க**
**மந்தவளி உமிழ் வளர்குடுமி நின்றிழிந்து**
**கொந்தவிழ் மலர்வீசிக் குளிர்கெழு முத்தெடுத்**
**திறைத்து**
**முந்தவெழு புனற்பொருநை முழுவளத்தது**
**அந்நாடு''**

என்று பாடியுள்ளார்.

இத்தகு பெருமை பொருந்திய நாட்டில் தாமிரவருணி நதிக்கரையில் வடபால் இருக்கும் கைலாசபுரம் என்னும் ஊரில் சண்முக சிகாமணி கவிராயர், சிவகாம சுந்தரி அம்மையார் எனும் தம்பதிகள் இறைவன்பால் மாறா அன்பும் நற்குண நல்லொழுக்கமும் நிறைந்தவர்களாய் வாழ்ந்து வந்தார் கள். இவர்கள் திருச்செந்தூர் முருகப்பெருமானை வணங்கி சஷ்டிவிரதம் இருந்து குழந்தை வரம் வேண்டி னார்கள்.

திருச்செந்தூர் ஆலயத்தில் முருகனின் பிரசாத மாகிய திருநீற்றைக் கையில் கொடுக்காமல் பன்னீர் இலையில் வைத்தே கொடுப்பார்கள். இலையை உடைய வேலைத் திருக்கரத்தில்கொண்டவன் முருகப் பெருமான். அவன் ஆலயத்திற்கு வந்து வணங்கு வார்களுக்குத் துன்பங்கள் இல்லை. பகை இல்லை, நோய் இல்லை, வறுமை இல்லை, பஞ்சம் இல்லை, நரகம் இல்லை, பிறப்பும் இல்லை, எக்குறையும் இல்லை என்று சொல்வதைப்போல பன்னீர் இலை யில் வைத்துப் பிரசாதம் கொடுப்பார்கள் இத்திருத் தலத்தில் என்பதை மீனாட்சி சுந்தரனார் நயம்பட

**''இலை அயில் குமரவேள் முன்**
**வணங்குவார்க் கென்றும் துன்பம்**
**இலை, அடுபகைசற்றேனும்**
**இலை படுபிணி நிரப்பும்**
**இலை, அளற் றுழன்று வீழ்தல்**
**இலை, பவ பவத்துச் சார்பும்**
**இலை, என இலைவி பூதி**
**எடுத்தெடுத் துதவல் கண்டார்.''**

என்று பாடியிருக்கும் பாடல் இங்கே குறிப்பிடத் தக்கது.

இத்தகைய திருச்செந்தூர் முருகன் திருவரு ளால்தான் நம் குமரகுருபர சுவாமிகள் கி.பி.1625- ஆம் ஆண்டு ஆனித் திங்கள் திருவாதிரை நன்னாளில் சண்முகக் கவிராயர். சிவகாமி சுந்தரியார் தம்பதி களுக்குப் புதல்வராக வந்து இப்பூவுலகில் தோன்றி னார்கள். குமரகுருபரரை ஈன்ற பெற்றோர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எனினும் அம்மகிழ்ச்சி நீடித்துநிற்கவில்லை. காரணம் ஐந்தாண்டுகள் ஆகியும் கூட நம் குமரகுருபரர் வாய்திறந்து ஓர் வார்த்தையும் பேசவில்லை. 'குழந்தை ஊமையா?'' என்று கண்டவர் கள் எல்லாம் வினவப் பெற்றோர்களும் மூங்கைப் பிள்ளையைத் தமக்கருளிய முருகப்பெருமானை நொந்துகொண்டார்கள்.

இறைவன் திருநாமம் அல்லாத ஒன்றையும் பேசக்கூடாது; எண்ணக்கூடாது என்று குமரகுருபரர் பூவுலகில் தோன்றுமுன் இறைவனிடம் வேண்டி யிருப்பார். இறைவரும் சுந்தரரைப் பூமிக்கு அனுப்பும் போது யாம் தடுத்தாட்கொள்வோம் என்று எவ்வாறு முன் கயிலையின்கண் அருள்புரிந்தாரோ அவ்வாறே குமரகுருபரரிடம் ''நீவாய் திறந்தால் எம்புகழைப் பாடுவாய். ஐந்து வயது வரை பேசாதிருந்தே எம்மைச் சிந்தித்திருப்பாய்'' என இவருக்கு வரம் அளித்து அனுப்பியிருப்பார் போலும். ஆதலால் தான் குமர குருபரரும் ஐந்து வயது வரையிலும் பேச்சொன்றும் பேசாமல் இறையருளைச்சிந்தித்தவராய் வாய்பேசாது ஊமையாய் இருந்துள்ளார். ஆனால் இவருடைய தெய்வத் தன்மையை அறியாத இவர்தம் பெற்றோரும் இவரை ஊமையே என மயங்கிக் மனக்கவலை கொண்டு நித்தமும் கலங்கினர். இவர்தம் பெற்றோரின் கலக்கத்தைக் கூறவந்த மீனாட்சி சுந்தரரும் கலை தேர்ந்தார் யாவரையும் தம் கவிநயத்தால் மூங்கை

யாக்கவல்ல குமரகுருபரரை மூங்கையோ என அவர்தம் பெற்றோர் எண்ணி உளங்கலங்கினர் என்பதை நயம்பட

''பூங்கையால் எடுத்தணைத்துப் புல்லினர் உச்சியும்
மோந்து
நாம் கையா வினையாற்றி நன்றிது பெற்றனம்
என்று
தீங்கை ஆயாது கலை தேர்ந்தார்கள் யாவரையும்
மூங்கையாக் கிடுவாரை மூங்கையர் எனத்
தெளிந்தார்''

என்று பாடியிருப்பதைக் காண்கிறோம்.

குமரகுருபரரைப் பிள்ளையாகக் கொடுத்த செந்தில் ஆண்டவரிடமே முறையிடுவோம், குறை இரப்போம் என நினைத்துப் பெற்றோர்கள் குமர குருபரரை உடன் அழைத்து வந்து சண்முகநாதர் கோயில் கொண்டிருக்கும் சண்முக விலாசத்தில் பல நாட்கள் உடனிருத்தி விரதம் இருந்தார்கள். குமர குருபரருக்கு ஐந்து வயது முடிந்து ஆறாவது வயது தொடங்கும் அந்நாளில் நிகழ்ந்தது ஓர் அற்புதம். குமரகுருபரர் சண்முகநாதர் திருவருளால் இலை விபூதியை வாங்கி உடம்பில் பூசிக்கொண்டார். சண்முகநாதரை ஆறுமுறை விழுந்துவணங்கி, சந்நி தானத்திலேயே உட்கார்ந்து தம் தொண்டையைக் கனைத்து

''பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறறிய
பாமேவு தெய்வப் பழமறையும்''

என்று ஆரம்பித்து ''அடியேற்கு முன்னின்று அருள்' என்று கண்ணில் நீர்வரக் கந்தர்கலி வெண்பாவினைப் பாடிமுடித்தார். குமரகுருபரருடைய முதல் பேச்சே கந்தர் கலிவெண்பாதான். செந்தில் ஆண்டவர் திருவருளால் நிகழ்ந்தது இந்த அற்புதம். அது முதற்கொண்டு உலகமெல்லாம் வியக்கும் வண்ணம் குமரகுருபரர் அருமையாகப் பேசவும் இனிமையாகப் பாடவும் செய்தார். ஐந்து வயதே நிறைந்த குமரகுருபரர் பாடிய, கந்தர் கலிவெண்பாவைக் காசினியே கண்டு வியக்க, குமர குருபரரைத் தமக்குத் தெய்வக் குழந்தை யாக வழங்கிய செந்திலாண்டவரை நினைந்து நினைந்து உருகி உருகி, நெஞ்சு நெக்குருகி வணங்கிப் போற்றலானார்கள் அவர்தம் பெற்றோர்.

திருஞானசம்பந்தரைப் போலவே தம் சிறு வயதிலேயே குமரகுருபரரும் தலயாத்திரையை மேற் கொண்டார். மதுரை, திருவாரூர், தருமபுரம், வைத்தீஸ் வரன் கோயில், சிதம்பரம், காசி எனப் பற்பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று பல பிரபந்தங் களால் பாடிப் புகழ்ந்துள்ள குமரகுருபரர் செய்தனவாக அறியப்படும் 16 பிரபந்தங்கள் வருமாறு:

1. சுந்தர் கலிவெண்பா
2. மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்
3. மதுரைக் கலம்பகம்
4. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை
5. மீனாட்சியம்மை குறம்
6. திருவாரூர் நான்மணிமாலை
7. புள்ளிருக்கு வேளூர் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ்
8. சிதம்பர மும்மணிக்கோவை
9. சிதம்பரச் செய்யுட் கோவை
10. சிவகாமி இரட்டை மணிமாலை
11. நீதிநெறிவிளக்கம்
12. பண்டார மும்மணிக்கோவை.
13. காசிக்கலம்பகம்
14. சகலகலாவல்லிமாலை
15. காசித்துண்டி விநாயகர் பதிகம்
16. கைலைக்கலம்பகம்

இவற்றுள் மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமி இரட்டை மணிமாலை ஆகிய மூன்று நூல்களும் குமரகுருபரர் அருளியவை அல்ல என்ற ஓர் கருத்தும் உள்ளது. மற்ற 13 நூல்களில் கைலைக் கலம்பகத்தில் ஓரிரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. காசித்துண்டி விநாயகர் பதிகம் கிடைக்கவில்லை. மற்றைய 11 நூல்களே இன்று நாம் கற்கவும், குமரகுருபரரின் சிறந்த திருவுள்ளத்தை அறியவும் நமக்கு முழுமையும் கிடைத்துப் பயன் பட்டு வருகின்றன.

குமரகுருபரரின் உள்ளம் தமிழ் உள்ளம். சைவ உள்ளம். எந்நேரமும் ஈசனை நினைத்து இன்புற் றிருந்த தெய்வ உள்ளம்.

அத்தகைய குமரகுருபரரின் சிறந்த திரு வுள்ளத்தைக் காட்டும் வகையில் அமைந்துள்ள சிதம்பர மும்மணிக் கோவையிலுள்ள ஒரே ஒரு பாடல் பகுதியை மட்டுமே ஈண்டுயான் எடுத்துக் காட்ட விழைகிறேன். தில்லை நடராஜப் பெருமா னிடம் குமரகுருபரர் வேண்டும் வரம் ஒன்று வியக்கத் தக்கதாக உள்ளது. மற்ற புலவர்களிடமிருந்து இத் தெய்வப் புலவரை வேறுபடுத்திக் காட்டும் அப் பாடல் பகுதியை இதோ படித்து மகிழுங்கள்:

''மல்லலம் பொழில் சூழ் தில்லை வாண
வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும் அதுவே
பெருங்குளிர்க்கு உடைந்த காலைக் கருந்துணி
பலதொகுத் திசைத்த ஒருதுணி அல்லது
பிறிதொன்று கிடையா தாக, வறுமனைக்

**கடைப்புறத் திண்ணை அல்லது கிடக்கைக்கு**
**இடம்பிறிது இல்லை யாக; கடும்பசிக்கு**
**உப்பின்று அட்ட புற்கை ஊன் அல்லது**
**மற்றோர் உண்டி வாய்விட்டு அரற்றினும்**
**ஈகுநர் இல்லை யாக; நாள்நாளும்**
**ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வி**
**மெய்த்தவர்குழாத் தொடும் வைக; இத்திறம்**
**உடல்நீங் களவும் உதவிக் கடவுள்நின்**
**பெரும்பதம் அன்றியான் பிறிதொன்று**
**இரந்தனன் வேண்டினும் ஈந்திடா ததுவே''.**

பட்டாடை வேண்டும், பொன் நகைகள் வேண்டும், மாடிமனைகள் வேண்டும், பால்பழம் வேண்டும் என்பதாகத்தான் ஒவ்வொருவரும் இறைவரை நித்தமும் வேண்டிக்கொள்வதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் தெய்வக் கவிஞரான நம் குமரகுருபர சுவாமிகளோ பெருங்குளிராக இருந்தாலும் கந்தல் ஆடை அல்லாத பிற ஆடை தமக்கு வேண்டாம் எனவும், எளிய வீட்டின் ஒட்டுத்திண்ணை அல்லாத பிறிதொரு இடம் தமக்குக் கொடுக்க வேண்டாம் எனவும், கடும் பசியாக இருந்தாலும் உப்பும் இல்லாத கஞ்சி மட்டுமே தனக்கு வேண்டும் எனவும், மெய்யடியார்களோடு தான் எப்போதும் கூடி மகிழ்ந்திருக்க வேண்டும் எனவும், உடல் உள்ளவரை இந்த வரமே கொடுத்துத் தான்மாற்றி வேண்டினாலும், அழுது கெஞ்சினாலும்கூட இவையல்லாத பிறவற்றைத் தனக்கு அளிக்காத அதையே வரமாக நம் குமர குருபரர் வேண்டியுள்ளார் எனில் இவர் தம் வீரத்தை என்னவென்பது?

சத்திமுற்றப்புலவர், தம் ஆடையில்லா வருத்தத்தைப் பாடிய பாடல் ஒன்று எனக்கு இப்பொழுது நினைவிற்கு வருகிறது. பாண்டிய மன்னனிடம் பரிசிலை வேண்டிச் சென்ற புலவர், குளிரில் நடுங்கி வாடிக்கொண்டிருக்கும் தனக்கு நல்ல ஆடை ஒன்றும் இல்லாத வருத்தத்தைத் தன் மனைவியிடம் போய் கூறுமாறு கூறி நாரையை நோக்கிப் பாடுவதாக அமைந்த அப்பாடல் வருமாறு:

**நாராய் நாராய் செங்கால் நாராய்**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்**
**நீயும்நின் மனைவியும் தென்திசை குமரிஆடி**
**வடதிசைக் கேகுவிர் ஆயின்**
**எம்மூர் சத்திமுற்ற வாவியுள் தங்கி**
**நனைசுவர் கூரை கனைகுரல்பல்லி**
**பாடுபார்த்திருக்கும் எம்மனைவியை நோக்கி**
**எங்கோன் மாறன் வழுதிக் கூடலில்**
**ஆடையின்றி வாடையின் மெலிந்து**
**கையது கொண்டு மெய்யது பொத்திக்**
**கால்அது கொண்டு மேலது தழீஇ**
**பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்**
**ஏழை யாளனைக் கண்டனம் எனுமே''**

எனும் இப்பாடல் சத்திமுத்தக் கவிஞரின் ஆடையும் இல்லா வறுமையை நமக்கு உணர்த்தி நம்மை 'அச்சச்சோ' என இரக்கப்பட வைக்கிறது. ஆனால் குமரகுருபரரின் ''பெருங்குளிர்க்கு உடைந்தகாலை கருந்துணி பலவுடன் இசைத்த ஒருதுணி அல்லது பிறதொன்று கிடையாது ஆக'' என்ற பாடற்பகுதி ''இதுவல்லவா வீரம்'' என்று நம்மை வியக்கச் செய்வதோடு நம்மை அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கவும் தூண்டுகிறது அல்லவா.

இதேபோல் வறுமையால் தெய்வத் தமிழைச் சனியான தமிழ் என்று வசை பாடியிருக்கும் புலவர் ஒருவரையும் நாம் பார்க்கிறோம். தமிழைப் படித்ததே தம் வறுமைக்குக் காரணம் என்று கருதும் பொற்களந்தைப் படிக்காசுத்தம்பிரான் என்ற அப்புலவர்

**''அட கெடுவாய் பலதொழிலும் இருக்க**
**கல்வி அதிகம் என்றே கற்றுவிட்டோம்**
**அறிவில்லாமல்**
**திடமுள மோகனமாட கழைக்கூத்தாட**
**செப்பிடுவித்தைகளாட தெரிந்தோமில்லை**
**தடமுலை வேசையராகப் பிறந்தோம் இல்லை**
**சனியான தமிழை விட்டுத் தையலர்தம்**
**இடமிருந்து தூது சென்று பிழைத்தோமில்லை**
**என்ன சென்மம் எடுத்துலகில்**
**இரக்கின்றோமே''**

என்று பாடி நொந்து கொண்டிருக்கிறார்.

ஆனால் வறுமையை வேண்டிப் பாடிய பெருமைமிகு புலவரான குமரகுருபர சுவாமிகளோ எது வறுமை? எது செல்வம்? என்பதையும்,

**''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே**
**அல்கா நல்குரவு அவாஎனப் படுமே''**

என்று தெளிவுறுத்தியிருப்பதோடு ஆயிரம் ஆயிரம் அடைகளால் தெய்வத் தமிழைப் பெருமைப்படுத்தியும் பாடியிருக்கிறார்.

அருந்தமிழ், இசை முத்தமிழ், கலைத் தமிழ்த் தீம்பால் அமுதம், கொத்து முத்தமிழ், கொழித்தெடுத்துத் தெள்ளித் தெளிக்கும் தமிழ், கொழி தமிழ், கொழுத்த தமிழ், சங்கத் தமிழ், செழுந்தமிழ்ச் செல்வம், செழுந்தமிழ் தெள்ளமுது, சொற்சுவை பழுத்த தொகைத் தமிழ், தண்டமிழ், அமுதெழு மதுரமது ஒழுகும் பசுந்தமிழ், தலைச்சங்கம் பொங்கும் பண்முத்தமிழ், தீஞ்சுவைக்கனியும் தண்டேனறையும் வடித்தெடுத்த சாரங்கனிந் தூற்றிருந்த பசுந்தமிழ்,

தெள்ளுதமிழ், தெளிதமிழ், தென்னந்தமிழ், தேக்கமழ் மதுரமொழுகிய தமிழ், பண்ணுலாம் வடிதமிழ், புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ், பைந்தமிழ், மதுரித்த வட்டெழு முத்தமிழ், முதுசொற்புலவர் தெளித்த பசுந்தமிழ், முதுதமிழ் உததி, மும்மைத்தமிழ், வண்தமிழ், வண்டமிழ்க் கடல், விரைதேன் பில்குந் தேத்தமிழ் என்பன தமிழின் பெருமையைப் போற்றும் தெய்வத்தமிழ்க் கவிஞரின் வாக்குகள் ஆகும். தமிழின் சுவையை உண்டு மகிழவே மதுரையின்கண் உமாதேவி தடாதகை பிராட்டியாகவும், சிவபெருமான் சௌந்தர மாற பாண்டியனாகவும், முருகர் உக்கிரவழுதி பாண்டி யனாகவும் வந்து தோன்றினர் என்பதை மதுரைக் கலம்பகத்தில் குமரகுருபரர்,

**''தமரநீர்ப்புவனம் முழுதொருங் கீன்றாள்**
**தடாதகா தேவி என் றொருபேர்**
**தரிக்க வந்ததுவும் தனிமுதல் ஒருநீ**
**சவுந்தர மாறன் ஆனதுவும்**
**குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்**
**கொண்டதும் தண்டமிழ் மதுரம்**
**கூட்டுண வெழுந்த வேட்கையால் எனில்இக்**
**கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்?''**

என்று பாடியிருப்பது கொண்டும், தமிழ்க் கடவுள் முருகர் இவருக்குப் பேசவும் பாடவும் மட்டும் வரம் அளிக்கவில்லை. தமிழையும் தம்வேல் கொண்டு இவர் நாவில் எழுதிவிட்டார் என்று நம்மைச் சிந்தித்து மகிழ வைக்கிறது.

இத்தகைய தெய்வப் புலவராகிய குமரகுருபரர் இரந்து வறுமையை வேண்டினாலும் இவரைத் தெய் வங்கள் வறுமையில் வாட்டிப் பார்த்திருந்தனவா எனில் பார்க்கவில்லை என்பதையே இவர்தம் வரலாறு வாயிலாக நாம் அறிகிறோம். முருகனைப் பாடும் மெய் அடியார்கள் ''மிடியாம்படியில் விதனப் படார்'' என்பது அருணகிரிநாதர் அருள்வாக்காகும். கந்தர் கலிவெண்பா, முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத் தமிழ் நூல்களால் முருகரையும், மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழால் மீனாட்சியையும், சகலகலாவல்லி மாலை யால் சரசுவதியையும், மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, திருவாரூர் நான்மணிமாலை நூல் களால் சிவபெருமானையும், பண்டார மும்மணிக் கோவையால் தம் குருநாதரான தருமபுரம் ஆதீனம் நான்காம் பட்டத்துச் சுவாமிகள் மாசிலாமணி தேசிகரையும் போற்றிப் பாடியுள்ளார் நம் குமரகுருபர சுவாமிகள். மேலும் தம் பிள்ளைத் தமிழ் நூல்களில் விநாயகர், திருமால், பிரமன், தேவேந்திரன், திருமகள், துர்க்கை, சத்தமாதர்கள், முப்பத்து மூவரையும் கூட இவர்பாட மறக்கவில்லை. மேலும் எத்தனை வகைப் பாக்கள் உண்டோ அத்தனை வகைப் பாக்களாலும் இவர் பாடி இறைவனைப் போற்றியதே சிதம்பரச் செய்யுட் கோவை எனும் நூல். இவ்வாறு தம் உள்ளமெனும் திருக்கோயிலில் நாளும் நாளும் தமிழ் மதுரப் பாக்களைப் புனைந்து கடவுளரைப் போற்றிய நம் குமரகுருபர சுவாமிகளை, அவரே வேண்டி இரந்தும்கூட நம் கடவுளர்கள் வறுமையை தந்து வாட்டவில்லை என்பதோடு வளமையும் பெருமை யும் தந்து அவரை வாழ்த்தியிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தாம் வாழ்ந்த காலம் அனைத்தும் மன்னருக்கு ஒப்ப மாபெரும் சிறப்போடும் செல்வச் செழிப் போடுமே வாழ்ந்துள்ளார் நம் சுவாமிகள். மீனாட்சி யம்மைப் பிள்ளைத் தமிழை இவர் மதுரை மீனாட்சி யம்மன் ஆலயத்தில், திருமலை மன்னர் முன்னிலை யில் அரங்கேற்றிக் கொண்டிருந்தார். வருகைப் பருவத்தில் ஒரு பாடல். தேனொழுகும் தமிழ்ச் சொற்களைப் பெய்து அன்னை மீனாட்சியை வர வேண்டி சுவாமிகள் பாடிய அத்தெய்வத் திருப்பாடல் இதோ:

**''தொடுக்கும் கடவுள் பழம் பாடல்**
**தொடையின் பயனே! நறைபழுத்த**
**துறைத் தீந்தமிழின் ஒழுகுநறும்**
**சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்**

**தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்**
**கேற்றும் விளக்கே! வளர்சிமய**
**இமயப் பொருப்பில் விளையாடும்**
**இளமென் பிடியே எறிதரங்கம்**

**உடுக்கும் புவனங் கடந்துநின்ற**
**ஒருவன் திருவுள்ளத்தில் அழ**
**கொழுக எழுதிப் பார்த்திருக்கும்**
**உயிரோவியமே! மதுகரம் வாய்**

**மடுக்கும் குழற்கா டேந்துமிள**
**வஞ்சிக் கொடியே வருகவே**
**மலையத் துவசன் பெற்றபெரு**
**வாழ்வே வருக வருகவே!''**

இப்பாடலைச் சுவாமிகள் பாடத் தொடங்கும் முன்பே அன்னை மீனாட்சி அழகுமிகும் ஒரு சிறுமியாக வந்து திருமலை மன்னன் மடியில் அமர்ந்து விட்டாள். பாடலை முடித்தபோது திருமலை மன்னனின் மார்பை அலங்கரித்திருந்த முத்தாரத்தைத் தாமே எடுத்து குமர குருபரரின் திருமார்பில் சூட்டி அன்னை மீனாட்சி மறைந்தனள் என்றால் இவர் மன்னரோடு சரி நிகராகப் பெற்ற வாழ்விற்கும் புகழுக்கும் வேறு சான்றுகள் வேண்டுமோ?

குமரகுருபரர் தம் குருநாதரான மாசிலாமணி தேசிகரின் கட்டளைக்கு இணங்க காசிக்குச் சென்றார். கங்கை யமுனை சரஸ்வதி மூன்றும் கலக்கும் திரி வேணி சங்கமத்தையும், காசி விசுவநாதரையும் தரி சித்தார். காசியிலேயே ஒரு மடம் அமைத்துக் கொண்டு தமிழையும் சைவத்தையும் வடக்கில் வாழும் மக்க ளிடம் பரப்ப வேண்டுமென்று ஆசை கொண்டார். மடம் கட்டுவதற்கான நிலத்தை அப்பொழுது காசியை ஆண்டு கொண்டிருந்த முகமதிய மன்னனிடம் கேட்டுப் பெற எண்ணினார். அம்முகமதிய மன்ன னுக்கு இந்திமொழி மட்டுமே தெரியும். ஆகவே அவனைப் பேட்டி காணத் தமக்கும் இந்திமொழி கற்பித்துத்தர வேண்டுமென கலைமகளைக் குறித்துப் பத்துப் பாடல்களால் சகலகலாவல்லி மாலையைப் பாடினார்.

''மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்
வாய், படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல கோடி உண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே''

என்ற பாடலைக் குமரகுருபரர் பாடி முடித்ததும் கலைமகள் தோன்றி இவருக்கு இந்திமொழி பேசும் ஆற்றலை அளித்ததோடு இவர் மன்னரைச் சென்று காணும் வகையில் ஒரு சிங்கத்தையும் வரவழைத்துத் தர குமரகுருபரரும் அதன்மேல் ஏறி அரண்மனையில் இருந்தவர்கள் நடுங்கி வணங்க பாதுஷாவின் இருப்பிடத்தை அடைந்தார்.

''சிங்கவா தனத்தில் தாடி திகழுற வீற்றிருந்த
தங்கஆ ரஞ்சேர் பாது ஷாவினைக் குறுகு தற்குச்
சிங்கமேல் ஏறித்தாடி சிறக்கக் கண் காப்புப்
பூண்டு
பங்குறு வார்கள் அஞ்சப் படர்ந்தனர் முனிவர்
ஆங்கே''

(குமரகுருபரர் சரித்திரம்)

சிங்கத்திலே ஏறியவாறு வந்த குமரகுருபரரை கண்டு அச்சமும் வியப்பும் அடைந்த காசி ஆண்ட பாதுஷா, மிக்க மரியாதையோடு ஆசனத்திலிருந்து எழுந்து இறங்கிவந்து நம் முனிவருக்குச் சலாமிட்டார். குமரகுருபரர் இந்தி மொழியிலேயே அம்மன்னனிடம் அளவளாவி கங்கைக் கரையில் ஒரு மடாலயம் அமைத்திட இடம் தர வேண்டும் என்று மன்னனிடம் கூறினார்.

'இந்தியில் ஓதப் புக்கார், எமக்கொரு மடா
லயத்தை
அந்தரத் தவரும் போற்றும் கங்கையங் கரையில்
ஆக்க
முந்திய மனையைத் தந்து மூவுல கேத்த நிற்பாய்
சிந்தியேல் எனக் கேட்டு திகைத்தனன் வியந்தான்
மன்னன்'

(குமரகுருபரர் சரித்திரம்)

மேலும் குமரகுருபரர் மன்னனிடம் இரண்டு கருடப் பறவைகள் எந்த இடத்தில் வலமாகப் பறக் கின்றனவோ அந்த இடத்தில் ஈசன் திருவருள் ஆணை யைக் கொண்டு மடாலயம் கட்ட விழைகிறேன்'' என்று கூற அவர் திருவுள்ளத்திற்கு இசைந்த மன்னனும் முனிவருடன் கேதாரகட்டத்துக்கு வந்து சேர்ந்தார். நம் குமரகுருபரரின் திருவிருப்பத்தின்படியே இரண்டு கருடப் பறவைகள் தம்முடைய இறகுகளை வீசி அப்பொழுது வானில் வலமாகப் பறக்க, அவை பறந்த வானிடத்திற்கு நேர்கீழே மன்னனும் இடம் வழங்க அவ்விடத்தில் அழகான மடத்தையும் கேதாரீஸ்வரர் கோயிலையும் நம் குமரகுருபர சுவாமிகள் கட்டி முடித்தார். குமரகுருபரர் அமைத்த மடமே இன்றும் குமாரசாமி மடம் எனும் பெயரில் சிறப்புற விளங்கிக் காசியில் நம் சைவசமயப் பெருமையும், தமிழ் மொழியின் பெருமையும் நிலைநாட்டி வருகிறது என்றால், குமரகுருபரரின் திருத்தொண்டினை எப்படிப் போற்றுவது? இவ்வாறு சுவாமிகள் வறுமையை இரந்து வேண்டியிருப்பினும், வாழ் நாளெல்லாம் மன்னர்களும் துறவிகளும் போற்றப் புகழோடும் பெருமையோடும் திகழ்ந்து தம் சீடர் களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கி அவர்களிடம் மடத்தை ஒப்புவித்து1688-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் தேய்பிறைப் பக்கம் மூன்றாம் நாள் காசி விசுவநாதரின் திருவடிக்கமல நீழலில் மேவி உலப்பிலா ஆனந்தம் அடைந்துள்ளார்கள்.

''ஒரும் வேதாந்தமென் னும் உச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரம் கொண்ட சைவ சித்தாந்தத்
தேன் அமுது''

என்று சைவ சித்தாந்தத்தைத் தம் பண்டார மும்மணிக் கோவை நூலில் மிகச் சிறப்பித்துப் போற்றியுள்ள நம் குமரகுருபரரின் திருப்புகழும், சைவமும் தமிழும் வாழும் வரை இவ்வையத்தில் வாழ்ந்திருக்கும் என்பது நிச்சயம்.

''திமிர மதமகற்றும் தெய்வக்கவிஞன்
குமர குருபரன் திருவடி வெல்க''

* * *

# கம்பனும் திருமுறைகளும்

## 2. திருநாவுக்கரசர்

— கம்பன் கவிநயமணி வே. தியாகராாசன்

திருநாவுக்கரசரின் பெருமையை ஒரு நாவால் கூற இயலாது என்றார் சேக்கிழார் பெருமான். பிற மதத்தில் ஈடுபட்டுச் சிவபெருமானை மறந்த அவரை ''இறைவனே! என் தம்பியை உன்னுடைய அடிமை யாக மாற்றியருள மாட்டாயா?'' என அவரது சகோ தரியான திலகவதியார் வேண்ட, திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் வந்து தாங்க முடியாத துன்பமடைந்து, திலகவதியாருக்குச் செய்தியனுப்ப, அவ்வம்மையார் செய்தி சொல்ல வந்தவரிடம் ''தம்பி சுகமா?'' எனக் கேளாது **''தீங்குளவோ''** எனக் கேட்டார். தீங்கு நேரிட்டால் சிவபெருமான் திருவருளால் தன் தம்பி மனம் மாறி சைவராகி விடுவார் என அவ்வம்மையார் நம்பினார். அவ்வாறே நாவுக்கரர் வர, திருவதிகை சென்று திருநீறு பெற்று சிவபெருமான் மீது பதிகம் பாட, சூலை நோய் நீங்கியது. திருநாவுக்கரசு சுவாமி கள் ''யமன் மாதிரி வந்து என்னைத் துன்புறுத்தும் இந்த சூலை நோயைத் தீர்த்தருள்க'' எனப் பாடினார்.

**''கூற்றாயினவாறு''** எனத் தொடங்கினார். உடலையும் உயிரையும் கூறுசெய்து பிரிப்பதால் யமனுக்குக் கூற்று எனப் பெயர் வந்தது. கூறு செய்பவன் கூற்றுவன் என்பது குறிப்பு. யமனை யமதர்மராஜன் என்றும் அழைப்பர். மனிதனின் ஆயுள் முடிந்துவிட்டது என்ற நிலையறிந்து தாமதமின்றி உயிரை நீக்கும் தொழில் செய்வதால் தருமராச பட்டம் அளித்தனர் போலும்! கம்பன் இந்த உண்மையை **''சாற்றும் நாள் அற்றது என்று எண்ணித் தருமம் பார்த்து ஏற்றும்வின்''** என்பார்.

சூலை நோயின் கொடுமை தாங்காது **''கூற்றம்''** எனக் குறித்தது நாவுக்கரசரைப் பிற மதத்திலிருந்து கூறு செய்து பிரித்ததால் என்று கூடப் பொருள் கொள்ளலாம். **கூற்றமாக வந்த சூலைநோய் அவரை நல்வழிப்படுத்திக் குற்றமற்றவராக்கியது** என்பது குறிப்பு. நோயின் கொடுமை அவர் உடலை வருத்தியது. உயிர் உடலிலிருந்து பிரியும்போது தாங்க முடியாது ஏற்படும் வேதனையை மரண வேதனை என்பர். இராவணன் சீதாபிராட்டியின் எதிரில் தோன்றியபோது, ''துயரத்தால் அவ்வம்மைபட்ட பாட்டை எப்படிக் கூறுவது? வேறொன்றும் செய்ய இயலாத நிலையில் யமனைக் கண்டு நடுங்கிய உயிர் போன்று துன்புற்றாள்'' என்றான் கம்பன்.

**ஆற்ற வெந்துயரத்து அன்னாள் ஆண்டுற்ற**
**அலக்கண் நோக்கின்**
**ஏற்றமென் நினைக்கலாகும்? எதிரெடுத்தியம்ப**
**லாகும்?**
**மாற்றமொன்றில்லை; செய்யும் வினையில்லை;**
**வரிக்கலாகாக்**
**கூற்றம் வந்துற்ற காலை உயிரெனக் குலைவு**
**கொண்டாள்.**

நான் பல கொடுமை செய்திருக்கலாம். ஆனால் அவை அறியாமற் செய்தவை என **''கொடுமை பல செய்தன நான் அறியேன்''** என்றார். குற்றம் செய்வது மனித இயல்பு - மன்னிப்பது தெய்வ இயல்பு (TO ERR IS HUMAN & TO FORGET IS DIVINE) என்பது வழக்கு. இத்தெய்வீக நிலையை **''பிழைத்தது பொறுத் தல் என்றும் பெரியவர் கடனே''** **என்பர் கம்பர்.** **'குற்றஞ் செய்வது எனக் கியல்பே - குணமாக் கொள்வது உனக்கு இயல்பே'** என்றும் **தீது செய் தனன்; செய்கின்றேன்; செய்வேன் - தீயனேன் கொடுந் தீக்குண இயல்பே - ஏது செய்தனனேனும் என் தன்னையே ஏன்று கொள்வது எம் இறைவ! நின் இயல்பே!** என்று இராமலிங்க சுவாமிகளும் **வெறுப் பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமை யினால் பொறுப்பவனே!** என மாணிக்கவாசகப் பெருமானும் இறைவனது எல்லையில்லாக் கருணை யைக் கூறினர்.

தன்னைத் துன்புறுத்தும் சூலைநோயின் கொடுமையைத் தாங்க ஆற்றவொண்ணாது, பிறவி யெனும் பெருநோய்க்கே மருந்தான இறைவனை யடைந்து வணங்கி முறையிட்டார் திருநாவுக்கரசர். கம்பன் இறைவனை **மால் தருபிறவி நோய்க்கு மருந்து** எனக் குறித்தார். சிவபெருமான் சூலைநோய் கொண்ட திருநாவுக்கரசர் தன்னையடைந்து நோய் நீங்கி இன்பமடையச் செய்த மாதிரியே, இராமபிரான் தீக்கணை விட்டு வருணனை அலறச் செய்தார். ''உலக

நாயக! நீயே சீறிச்சினந்து கோபித்தால் வேறுயார் காப்பாற்றுவார். கடலைத் தாண்டுவது உனக்கு ஒரு அரிய செயலா? எனக்கு என வேறு வலிமையுண்டா! என்னைக் காத்தருள வேண்டும்?'' என முறை யிட்டான்.

***நவையறும் உலகுக்கெல்லாம் நாயக! நீயே சீறின்***
***அவையம் உன் சரணமல்லால் சரணென்று கண்ட***
***துண்டோ?***
***இவையுனக் கரியதேயோ? எனக்கென வலி***
***வேறுண்டோ?***
***அபயம் அபயம் என்று அடுத்தடுத்து அரற்ற***
***லுற்றான்.***

வருணனை இராமபிரான் காத்தமாதிரி நாவுக் கரசரையும் இறைவன் காத்தருளினார். இவ்வளவு கருத்துக்கள் அடங்கி இறைவனருளை நாவுக்கரச ருக்குக் கிடைக்கச் செய்தபாடல் இதோ:

**திருச்சிற்றம்பலம்**

***கூற்றாயினவாறு விலக்ககிலீர்! கொடுமைபல***
***செய்தன நானறியேன்***
***ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது***
***வணங்குவன் எப்பொழுதும்***
***தோற்றாது என் வயிற்றின் அகம்படியே***
***குடரோடு துடக்கி முடக்கியிட***
***ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில***
***வீரட்டானத்துறை அம்மானே!***

**திருச்சிற்றம்பலம்**

இரவும் பகலும் உன் திருவடியைப் பிரியாது வணங்குவேன் என்றார். **அடி உதவுவது போல் அண்ணன் தம்பி கூட உதவ மாட்டார்** என்பது ஒரு பழைமையான வழக்கு. எவரையாவது அடக்க வேண்டுமானால் **அடித்து** துன்புறுத்தி வழிக்குக் கொண்டு வரலாம் எனப் பொருள் கொள்கின்றனர். இறைவனது **திருவடி** உதவுவதுபோல் எவரும் உதவ மாட்டார் என இறைவன் திருவடியை விளக்குவது இப்பழமொழி. என்றும் எப்போதும் உதவும் திரு வடியை வணங்கினார் நாவுக்கரசர் சுவாமிகள்.

திருநாவுக்கரசரின் வரலாற்றில் அவர் சமணர் களால் துன்புறுத்தப்பட்ட நிகழ்ச்சி விவரங்களும், பிரகலாதனை இரணியன் துன்புறுத்திய விவரங்களும் ஒரே மாதிரியுள்ளன. திருநாவுக்கரசரை சுண்ணாம்புக் காளவாயிலிட அவர் துன்புறவில்லை. இறைவன் திருவடியை நினைத்திருந்ததால் **காதுக்கு** இன்ப மளிக்கும் வீணையிசை போன்றும், **கண்களுக்கு** இன்பமளிக்கும் மாலை நிலவு போன்றும், **மூக்கிற்கு** இன்பமளிக்கும் வாசத் தென்றல்போலும், **வாய்க்கு** இன்பமளிக்கும் பொய்கை போன்றும் உடலுக்கு இன்பமளிக்கும் மாலை இளந்தென்றல் போலும் இன்பமளித்தது இறைவனது திருவடி நினைவு என்றார். ஐம்புலன்களும் இன்புற்றன என்றார்.

**திருச்சிற்றம்பலம்**

***மாசில் வீணையும் மாலை மதியமும்***
***வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்***
***மூசு வண்டறை பொய்கையும் போன்றதே***
***ஈசன் எந்தை இணையடி நீழலே.***

**திருச்சிற்றம்பலம்**

இரணியனது ஏவலால் தீக்குழிக்குள் தள்ளப் பட்ட பிரகலாதனை தீ ஒன்றும் செய்யவில்லை. அது குளிர்ந்து இன்பத்தையே உண்டாக்கியது. **குளிர்ந்தது சுடுதீயே** எனச் சுருக்கமாகக் குறிப்பிட்டார் கம்பர்.

திருநாவுக்கரசரைக் கொல்ல யானையை ஏவினர். ''பொடி பூசிய பெருமான், சந்திரனைத் தலையில் தரித்தவர், யானைத் தோலையணிந்தவர், பவள மேனியர், தலைமைக் காவலனான காளையை வாகனமாக உடையவர், பாம்பணிந்தவரான பெருமான் கெடில நதிக் கரையில் உள்ளார். அவரது அடிமையான நாம் அஞ்ச வேண்டியதில்லை. அஞ்ச வேண்டிய ஏதும் நேராது'' என்றார்.

**திருச்சிற்றம்பலம்**

***சுண்ணவெண் சந்தனச் சாந்தும்; சுடர்த்திங்கள்***
***சூடாமணியும்***
***வண்ணவுரிவை உடையும்: வளரும் பவள நிறமும்***
***அண்ணல் அரண்முரணேறும் அகலம் வளாய***
***அரவும்***
***திண்ணன் கெடிலப்புனலுமுடையார் ஒருவர்***
***தமர் நாம்;***
***அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவது***
***மில்லை.***

**திருச்சிற்றம்பலம்**

என்ற தேவாரம் பாடியபோது யானை அவரை வணங்கிச் சென்றுவிட்டது.

பிரகலாதன் மீது இரணியன் கட்டளையால் யானை ஏவப்பட்டபோது ''முன்னொரு காலத்தில் உன் முன்னோர்களின் ஒன்றான ஒரு யானை, முதலை

யின் வாயில் அகப்பட்டுக் கொண்டு ''ஆதிமூலமே'' என அலற, என் மனத்தில் வசிக்கும் இறைவன் ஓடிவந்து முதலையை அழித்து யானையைக் காத் தருளினார். உன் முன்னோர்களின் ஒருவனைக் காத்த பெருமானின் திருவடி வணங்கும் என்னை அழிக்கப் போகிறாயா?'' எனக் கேட்க நாவுக்கரசை வணங் கியது போல யானை பிரகலாதனையும் வணங்கி அகன்றது என இரணியன் வதைப்படலத்திலே கூறி யருளினான் கம்பன்.

அடுத்து திருநாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலில் தள்ளினர். நமச்சிவாயம் காத்தருளும் என அவர் பாட

**திருச்சிற்றம்பலம்**

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக்கை தொழ**
**கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்**
**நற்றுணையாவது நமச்சிவாயவே**

**திருச்சிற்றம்பலம்**

கல், கடல்நீரில் மிதந்து திருப்பாதிரிப் புலியூரை யடைந்தது. அவர் கரையேறிய இடத்தை இன்றும் **கறையேறவிட்ட குப்பம்** என அழைக்கின்றனர்.

பிரகலாதனையும் கல்லில் கட்டி கடலில் எறிய, சிரமேற்கரங் குவித்து, மன உறுதியுடன் இறைவனை தியானிக்கக் கல் மிதந்தது. பச்சை நிறமான கல்மலை மீது பிரகலாதன் ஆலிலையில் கண்ணன் காட்சியளித்த மாதிரித் தோன்றினான் என்றார் கம்பர்.

**தலையிற் கொண்ட தடக்கையினான்; தன்**
**நிலையில் தீர்வில் மனத்தின் நினைந்தான்**
**சிலையில் தண்புனலில் சினை ஆலின்**
**இலையில் பிள்ளை எனப் பொலிகின்றான்**

என்றார்.

திருநாவுக்கரசும் பிரகலாதனும் ஒரே மாதிரி தண்டிக்கப்பட்டும், இறைவனருள் அவர்களுக்குத் துணை செய்து காத்தது. அம்மட்டோ! அவ்விரு பெரியோர்களும் இறைவனிடம் வரம் வேண்டும் போது கூட ஒரே மாதிரி வரம் வேண்டினர்.

''கங்கையைத் தலையில் சூடிய செம்மேனி யம்மானான திருப்புலியூர் நாயக! தொழும் அடியார்க்கு இரங்கும் கருணையாளனே! நான் ஒரு புழுவாகப் பிறந்தால் கூட உன் திருவடியை மறவாதிருக்க வேண்டும்'' என வேண்டினார் நாவுக்கரசர்.

**திருச்சிற்றம்பலம்**

**புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா! உன்னடி என் மனத்தே**
**வழுவாதிருக்க வரந்தர வேண்டும்! இவ்வையகத்தே**
**தொழுவார்க்கு இரங்கி இருந்து அருள்செய்பாதிரிப் புலியூர்ச்**
**செழும்புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே**

**திருச்சிற்றம்பலம்**

கம்பனது பிரகலாதனோ ''பெருமானே! ஏற் கனவே எனக்கு எவ்வளவோ தடவைகள் அருள் செய்து காத்து விட்டாய். இன்னும் என்ன வேண்டும். எலும்பே இல்லாத புழுவாக அடியேன் பிறந்தால் கூட உன் அருள் எனக்கு என்றும் இருக்க வேண்டும்'' - என வரங் கேட்டார்.

**முன்பு பெற்ற பேறோ முடிவில்லை**
**பின்பு பெறும் பேறும் உண்டோ? பெறுவனேல்**
**என்பு பெறாத இழி பிறவி எய்திடினும்**
**அன்பு பெறும் பேறே அரும்பேறு தானென்றான்.**

அப்படி வேண்டிய பிரகலாதனுக்கு ''உனக்கு வேறு பிறவி கிடையாது. நீ என் போல என்று மிருப்பாய்'' (**நீ எந்நாளுமுளாய் என் போலேயுளை என்றான்**) என வரங்கொடுத்தார் என்பது வரலாறு.

இவ்வாறு நாவுக்கரசரின் வாக்கும் கம்பன் வாக்கும் ஒரே மாதிரி அமைந்துள்ளன. இது நம் தாய்மொழியும் நம் தாய்நாடும் செய்த பெருந்தவப் பயனன்றோ''

**எந்தன் செந்தமிழ் எந்தன் செந்தமிழ்**
**என்றும் புகழ்வேனே**
**எந்தாய் மொழியென எந்தாய் மொழியென**
**என்றும் மகிழ்வேனே.**

**எந்தாய் வாழ்க.**

**திருச்சிற்றம்பலம்.**

★ ★ ★

# தீவினைகள் நீங்கத் திருநீலகண்டப் பதிகம்

— த. ஆறுமுகம்

தமிழ்நாட்டில் நிலை குலைந்துபோன சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் நிலை நிறுத்தி ஓங்கச்செய்ய இறைவனால் அனுப்பப்பட்ட ஓப்புயர் வற்ற இறைதூதர் திருஞான சம்பந்தர்.

தமிழகத்தில் காலங்காலமாக சைவமும் தமிழும் இருகண்களாகப்போற்றி வளர்க்கப்பட்டு வந்தன. 1300 ஆண்டுகளுக்கு முன் அந்த நிலைமை மாறி சமண, பௌத்த சமயங்களும் அவற்றின் மொழி களும் செல்வாக்குப் பெற்று விட்டன.

சைவர்கள், தமிழர்கள் சார்பாக இறைவ னிடம் சைவ சமய மறுமலர்ச்சிக்காக முறையிட்ட சிவபாத இருதயர் என்ற அந்தணர் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த சிவபெருமான் தனக்கு அணுக்கத்தில் இருந்த திருஞானசம்பந்தரைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தார். இதற்குச் சம்பந்தர் பாடலே அகச்சான்றாக அமைந்து இருக்கிறது. அப்பாடல்

**துறக்குமா சொலப்படாய் துருத்தியாய்**
**திருந்தடி**
**மறக்குமா றிலாதஎன்னை மையல்செய்து**
**இம்மண்ணின்மேல்**
**பிறக்குமாறுகாட்டினாய் பிணிப்படும்**
**உடம்பு விட்டு**
**இறக்குமா றுகாட்டினாய்க்கு இழுக்குகின்றது**
**என்னையே.**

திருஞானசம்பந்தர் கைலாயத்தில் இறைவன் திருமுன் இருந்துகொண்டு இடைவிடாமல் அவரையே நினைத்தபடி இருந்தார். சிவபெருமான் அவரை அழைத்துத் தன் சொல்லை மறுத்துப் பேச முடியாதபடி (மையல் செய்து) தமிழ்நாட்டில் சீகாழியில் சிவபாத இருதயருக்கு மகனாகப் பிறக்கச் செய்தார்.

ஆளுடைய பிள்ளையார் மூன்றாண்டு தொடங்கி பதினாறு ஆண்டுகள் வரை தமிழ்நாடு முழுவதும் திருப்பயணம் மேற்கொண்டு பல செயற்கரிய செயல்கள் செய்து சைவ சமயத்தை யும் தமிழ் மொழியையும் தழைக்கச் செய்தார்.

பாலறாவாயர் திருப்பயணத்தின்போது கொங்கு நாட்டைச் சார்ந்த கொடிமாடச் செங்குன் றூருக்குத் (திருச்செங்கோடு) அடியார்களுடன் எழுந் தருளினார். அப்போது பனிக்காலம். திருஞான சம்பந்தருடன் வந்த அடியார்கள் பலர் அந்நாட்டில் பலநாள் தங்கியிருந்ததால் அப் பனிக் காலத்தில் வழக்கமாக வரத்தக்க குளிர்ச் சுரத்தின் தாக்குதலுக்கு ஆளாகி விடுவார்களோ என்று அஞ்சி அவரிடம் முறையிட்டனர். அவர் சொன்னார் ''நாட்டின் இயல் பால் காய்ச்சல் வரலாம். ஆனால் நம்மைச் சார்ந்த வர்க்கு (அடியார்களுக்கு) வந்து அடையாது'' அவர் சொன்னதை உறுதி செய்வார் போல சிவபெருமானை நோக்கிப் பதிகம் பாடினார். சிவபெருமான் ஒரு காலத்தில் நஞ்சையே அமுதாக உட்கொண்டு கழுத் தில் அடக்கித் தேவரைக் காத்தலால் அந்த நீலகண்டம் அடியார் இடர் எல்லாம் போக்கும் என்னும் கருத்தில் ஒவ்வொரு பாட்டின் இறுதி யிலும் **''தீவினை தீண்டப் பெறாதிரு நீல கண்டம்''** என்று ஆணையிட்டுக் கூறினார். இப் பதிகம் பாடியதனால் குளிர்ச்சுரம் அடியாரைத் தாக்காதது மட்டும் அல்லாமல் கொங்கு நாட்டிலேயே தலைகாட்டாது ஒழிந்தது.

இப்பதிகத்தை நாம் நாடோறும் ஓதி வருவோ மானால் வினையின் பல திறப்பட்ட தாக்குதல் களையும் தவிர்த்துக் கொள்ளலாம். பதிகப் பாடல் களின் கருத்து:

1. ''நாம் சென்றபிறவிகளிலும் இப்பிறப்பின் முன் நிலையிலும் செய்த தீவினையின் பயனை அனுபவித்துத்தான் தீரவேண்டும்'' என்று சொல்லு வதற்கு மட்டும் அறிந்திருக்கிறீர்கள். ஆனால் அதற்கு என்ன தீர்வு? அதிலிருந்து எப்படி தப்புவது என்று அறியாமல் இருப்பது உங்களுக்குக் குறை

வல்லவா? எனவே உடலால் தெய்வத்தொண்டு கள் செய்து இறைவனைப் போற்றினால் அடியாராம் நம்மை அத்தீவினைகள் வந்து தீண்டமாட்டா. திருநீலகண்டப் பெருமான் துணை நிற்பார்.

2. நந்தவனங்கள் அமைத்தும் குடிக்கவும் நீராடவுமான நீர்நிலைகள் உண்டாக்கியும் பக்குவப் பட்ட மனத்தோடு ''முப்புரங்களை அம்புதொடுத்து எரியுண்ணச் செய்தவரே'' என்று சொல்லி காலை மாலை, இரவு, பகல் இரு பொழுதும் மலர் பறித்து இறைவன் திருவடியில் தூவிப் போற்றினால் தீவினைகள் அடியாராம் நம்மைத் தீண்டமாட்டா.

3. இல்லற இன்பங்களுக்கும் மற்ற இன்பங் களுக்கும் விலையாக (மாறாக) அருளின்பம் கொடுத்து எங்களை ஆட்கொண்ட விரிந்த சடையுடைய பெரு மானே! முத்தலைச்சூலம், தண்டு, மழு ஏந்தியவரே! உங்கள் அருளால் சினங் கொண்டாற்போல தாக்க வரும் தீவினை எங்களை அணுகமாட்டா.

4. விண்ணுலகத்தை ஆளுகின்ற தேவர் களாலும் சார்ந்த மறையவர்களாலும் ''புண்ணியரே'' என்று இரண்டு வேளையும் தொழப்படும் புண்ணியப் பயனாய் உள்ளவரே! இடையறாது அருள்நோக்கம் பாலிக்கும் மூன்று கண்களை உடையவரே! உங்கள் திருவடியை அடைந்து விட்டோம். இனி உறுதி வாய்ந்த தீவினை எங்களை விட்டு விலகியே நிற்கும்.

5. இணையில்லாத மலைகள் போன்ற உறுதி பெற்ற தோள்களை உடையவரே! உங்களுக்கே உரிய ஆற்றலால் எங்களை ஆட்கொண்டுவிட்ட பிறகு, எங்கள் குறைகளைக் கேளாமல் இருப்பது உங்கள் தன்மையா? உலகத்தாரால் துணை என்று கருதப்படும் மற்றவர் துணைகளை யெல்லாம் பொருட்படுத் தாமல் உங்கள் திருவடியையே துணையாக அடைந்து விட்டோம். அதனால் கோபித்துத் தாக்கவரும் தீவினை கள் எங்களைத் தீண்டமுடியாது.

6. உமது திருவருளின் இன்றியமையாமையை அடிக்கடி மறந்துவிடும் மனத்தின் போக்கை மாற்றி எங்கள் உயிரை வலிமையற்றதாக்கும் பிறப்பில்லாத பெருமானே! உம் திருத்தமான திருவடிகளுக்குத் தவறாமல் மலர் பறித்துச் சூட்டி போற்றி வழிபடு வோம் அடியாராகிய நாங்கள். நன்மை செய்யாத தீவினை எங்களைத் தீண்டவே முடியாது.

7. மீண்டும் பிறவி எடுப்பதற்கு ஏற்ற வாழ்க்கை முறையைக் கைவிட்டு உங்கள் திருவடிக்கே உருக்கம் கொண்டு மலரிட்டுப் போற்றுவதையே பணியாகக் கொண்ட அடியவர்கள் நாங்கள். தன்னை எதிர்த்துப் போரிடுவார் யாருமில்லாத அரக்கனாகிய இராவணனை ஒப்பற்ற முறையில் (ஒரு கால் பெருவிரலால்) அடக்கிப் பின்னர் அருளும் செய்த வரே! தெய்வத்தன்மையில்லாத தீவினை எங்களை நெருங்காது.

8. மணமுள்ள தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன் மற்றும் திருமால் தாம் தாம் பெரியர் என்று வாதுசெய்து காண்பதற்கரிய உங்கள் அடியையும் முடியையும் நெருங்க முடியாத தன்மை உடையவரே! எங்களுக்கு உங்கள் திருவடிக்காட்சி கிடைப்பினும் கிடைக்கும். அதனால் அடியராகிய நாங்கள் உங்களைத் தொழுது வணங்குவோம். சீறிவரும் தீவினை எங்களைத் தீண்ட முடியாது.

9. சிலர் பௌத்தசமயம் சார்ந்தும் மற்றும் சிலர் சமணசமயத்தைச் சார்ந்து ஆடை அணிவதை ஒழித்தும் இம்மை மறுமை நலங்களைப்பெறும் பாக்கியம் இல்லாததால் அவற்றைத் துறந்து விட்டதாகக் காட்டிக் கொள்கிறார்கள், அழகும் மணமும் கொண்ட கொன்றை மலரினை விரும்பி அணிந்த சடை உடையவரே! உங்கள் திருவடியைப் போற்றுகின் றோம். தீக்குழிபோலச் சுடுகின்ற தீவினை எங்களைத் தாக்கப் போவதில்லை.

10. சிவபெருமான் திருவடிப் பயனைப் பெறும் பொருட்டு, இப்போது வாய்த்துள்ள இப் பிறவியைப் பாதுகாத்துக் கொள்வார் அடியார். மீண்டும் ஒருபிறவி உண்டானால் தேவர்க்குத் தேவரான சிவபெருமான் திருவடித் திறங்களை நண்குணர்ந்து செந்தமிழால் திருஞானசம்பந்தர் பாடிய பத்துப் பாடற் கருத்துகளையும் கடைப்பிடிப்பவர் சிவலோகத்தில் தேவதேவன் சிவனோடு ஒன்று சேர்வார்.

# திருநீலகண்டப் பதிகம்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாதிருப்பது உந்தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எமைத்தீண்டப் பெறா திருநீலகண்டம் 1

காவினை இட்டும் குளம் பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்று எரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்து எமை தீண்டப் பெறா திருநீலகண்டம் 2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்று எவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு எமை ஆண்டவிரி சடையீர்
இலைத்தலை சூலமும் தண்டும் மழுவும் உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 3

விண்ணுலகு ஆள்கின்ற விச்சாதரரும் வேதியரும்
புண்ணியர் என்று இரு பொழுதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்று உடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநிலகண்டம் 4

மற்று இணையில்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்று எமைஆட்கொண்டு கேளாதுஒழிவது உம்தன்மை கொலோ
சொற்றுணை வாழ்க்கைத் துறந்தும் திருவடியே அடைந்தோம்
செற்று எமை தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 5

மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்தி
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்து உம்மை ஏத்துதும் நாம் அடியோம்
சிறப்பிலித்தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 6

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்து உம் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்து உமை ஏத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனை சீரில் அடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 7

நாற்ற மலர் மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர் வரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 8

சாக்கியப்பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கிய மின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடிபோற்றுகின்றோம்
தீக்குழி தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 9

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞான சம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே 10

# நாத முனிகள்

— முனைவர் தெ. ஞானசுந்தரம்

### பிறப்பு

இவரே ஆசாரிய மரபில் முதல்வர். வீர நாராயணபுரமென்னும் காட்டுமன்னார் கோயிலில் வாழ்ந்தவர். ஈசுவர முனிகளுக்குத் திருமகனார், நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தினை அரும்பாடு பட்டுத் தொகுத்தவர் இவரே.

### தேடிச் சேர்த்த செல்வம்

நாத முனிகள் ஒரு நாள் திருநாராயண புரத்தைச் சேர்ந்த வைணவர்கள் சிலர் காட்டு மன்னார் திருமுன்பு 'ஆராவமுதே' என்னும் திருவாய்மொழியைப் பாடக் கேட்டார். அதன் இறுதியில் 'குழலில் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்' என்று வருவதனைக் கொண்டு திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களைக் கொண்டது என்று உணர்ந்து, அதனைத் தேடி ஆழ்வார் பிறந்த ஊரான திருக்குருகூருக்குச் சென்றார். அங்கு மதுர கவிகளின் வழியினரான பராங்குசதாசர் என்ப வரைச் சந்தித்துக் 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்னும் நூலினைப் பெற்று அதனை நம்மாழ்வார் எழுந்தருளி யிருந்த திருப்புளியாழ்வார் அடியில் (புளிய மரத் தடியில்) முறையோடு பன்னீராயிரம் உருச்சொல்லி நிறைவு செய்தார். நம்மாழ்வார் இவருக்கு ஞானக்கண் வழங்கிச் சமய நுண்பொருள்களையும் யோக நுட்பங் களையும் உயர்த்தித் திவ்வியப் பிரபந்தங்களையும் தந்தருளினார்.

குருபரம்பரை கூறும் இவ்வரலாற்றால் திவ்வியப் பிரபந்தங்களைத் தொகுத்தவர் நாத முனிகள் என்பது தெளிவாகிறது. பெரியோர்கள் வரலாறுகளைத் தீட்டும் பிற்காலத்தவர் அவர்கள் வாழ்க்கை வரலாற்றில் இயற்கை இறந்த நிகழ்ச்சி களை விரவி எழுதுவது வழக்கம். அம்முறையில் நாதமுனிகள் அரிதின் முயன்று நம் பக்தி பெருக் கினைத் திருக்குருகூரில் வாழ்ந்த பராங்குசதாசரும் மற்றவரும் உணருமாறு செய்து நாலாயிரத்தையும் திரட்டினார் என்பதனையே கண்ணிநுண் சிறுத்தாம் பினைப் பன்னீராயிரம் உருச்சொல்லி நம்மாழ் வார் அருளால் அவற்றைப் பெற்றார் என்று கூறுவதாகக் கொள்வது வரலாற்று நெறிக்கு இசைவ தாகும்.

### நாதமுனிகளின் இசைப் புலமை

இவர் இசையில் வல்லவராக விளங்கினார் என்பதனை ''இசைகாரர் இயலுக்கு இசைய இசையிட வல்லவர்கள், ஸ்ரீமதுர கவிகளையும் நாதமுனிகளை யும் போலேயிருக்குமவர்கள்'' என்னும் உரைப் பகுதி தெரிவிக்கிறது''. இதனை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று அவர் வரலாற்றில் காணப்படுகிறது.

சோழன் அவையில் பெண்கள் இருவர் பாடினர். அவர்களுள் மனித கானம் பாடியவள் போற்றப்பெற்றுத் தேவகானம் பாடியவள் புறக் கணிக்கப்பட்டாள். புறக்கணிக்கப்பட்ட அவள் ஒரு நாள் காட்டுமன்னார் திருமுன்பு நின்று தேவகானம் இசைத்தாள். அதனைக் கேட்டு மகிழ்ந்த நாதமுனிகள் அவளுக்குத் துழாய் நீரும், திருப்பரிய பட்டமும் அருளிப் பாராட்டினார். அவள் அரசன்பாற் சென்று தன் தேவகானத்தை அறிந்து போற்றும் ஒருவர் காட்டுமன்னார் கோயிலில் இருக்கிறார் என்று பெருமிதத்தோடு புகன்றாள். சோழ மன்னன் மீண்டும் அவையினைக் கூட்டினான். நாத முனிகளை அழைத் தான். பெண்கள் இருவரும் பாடினர். அவர்கள் பாடலைக் கேட்ட நாதமுனிகள் மன்னனால் மனித கானம் பாடுகிறவள் இசையினை மட்டுமே உணர முடியுமென்றும், தேவகானம் பாடுகிறவள் சிறப் பினைத் தேவர்களே உணர முடியுமென்றும் உரைத் தார். அதுபோழ்து மன்னன், மனிதராகிய நாதமுனி களால் எவ்வாறு தேவகானத்தை உணர முடிந்தது என்று வினவினான். இதனால் நாத முனிகளுக்குத் தம் இசைப் புலமையினை நிறுவ வேண்டிய நெருக்கடி நேர்ந்தது. அவர் நாற்பது நூறு தாளங்களை ஒரு சேர ஒற்றச் சொல்லி அவற்றின் ஓசை வேறுபாடு களைக் கொண்டு ஒவ்வொன்றின் எடையினையும் கூறினார். அவற்றைத் தனித் தனியே நிறுத்துப் பார்த்த மன்னன் அவர் கூறியது முற்றிலும் சரியாக இருந்தது கண்டு அவரைப் போற்றினான்.

மேற்கூறிய நிகழ்ச்சியும் நாலாயிரத்தையும் திரட்டிய நாதமுனிகளே அவற்றிற்கு இசை வகுத்து ஒழுங்குபடுத்துவதற்கு வேண்டிய இசைத் தகுதி யினையும் உடையவராய்த் திகழ்ந்தார் என்பதனை உறுதிப்படுத்துகின்றது. இவ்விசை வகுக்கும் முயற்சி

யில், அவர் தம் மருமக்க ளான கீழையகத்தாழ்வாரும் மேலையகத்தாழ் வாரும் துணைபுரிந்துள்ளனர்.

### பக்திப் பெருவாழ்வு

நாத முனிகள் இறைவன்மீது கொண்டிருந்த எல்லையற்ற பக்தியினையும் உணர்வுமயமான அவரது வாழ்க்கையினையும் பின்வரும் நிகழ்ச்சியால் உணர முடிகின்றது. ஒருநாள் அரசன் ஒருவன் சாமந்தன் (படைத்தலைவன்) தலையிலே அடியை யிட்டு யானைக் கழுத்தில் புக்கபடியைக் கண்டு, தேவாதி தேவனாகிய திருமால், பிரமன் முதலானோர் தலையிலே இப்படியல்லவா அடியிட்டுப் பெரிய திருவடியின்மேல் ஏறியருளு கிறான் என்று எண்ணிச் சிந்தை மயங்கினார் என்கிறது ஈடு. இத்தகைய உணர்வுநிலையில் வாழ்ந்த நம் நாதமுனிகள் சோழ மன்னன் துணையோடு வேட்டைக்கு வந்து திரும் புங்கால் அவர் இல்லம் வந்து ஒரு குரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண் பிள்ளையுமாக வந்து தேடிச் சென்றார்கள் என்று தம் பெண்கள் சொன்ன அளவில் வந்தவர்கள் இராமலக்குவர்களும் பிராட்டியும் அனும னும் என்று கருதி அவர்களைத் தேடிக்கொண்டு கங்கைகொண்ட சோழபுரம் கீழ்வாசல் வரை சென்றார் என்பதும். அங்கிருந் தோர்தாங்கள் அப்படி எவரையும் பார்க்கவில்லை என்றபோழ்து ஏங்கி விழுந்து உயிர் விட்டார் என்பதும்'' அவர்தம் இயல்புக்குச் சேர்ந்தன வாகவே அமைகின்றன.

1) நாத முனிகள் கி.பி. 10 ஆம் நூற்றாண் டின் பிற்பகுதியிலும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதி யிலும் வாழ்ந்தவர் என்கிறார் மா. இராசமாணிக்கனார்.

2) நாதமுனிகள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண் டின் பிற்பகுதியிலும் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பெரும் பகுதியிலும் வாழ்ந்திருக்கலாம் என்றும், பத்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியைச் சார்ந்த இரண்டாம் பராந்தகன் காலத்திய அன்பில் செப்பேட் டில் குறிக்கப்பெறும் ஸ்ரீநாதர் என்னும் ஆசாரியர் அவராகவே இருக்கலாம் என்றும் கருதுகிறார் டி.ஏ. கோபிநாத ராவ்.

3) நாத முனிகள் கி.பி. 823 இல் தோன்றிக் கி.பி. 918 இல் மறைந்தார். அவர் தொண்ணூற் றைத் தாண்டி வாழ்ந்தவர் என்பது மு. இராகவ ஐயங்கார் முடிபு.

மா. இராசமாணிக்கனார் கருத்துக்குச் சான்றாக அமைவது நாதமுனிகள். கங்கை கொண்ட சோழ புரத்தில் இறந்தார் என்பதாகும். அந்நகரம் இராசேந் திரன் வடபுலவெற்றியின் நினைவாக எடுக்கப் பெற்ற புதிய தலைநகரம். அவன் வடபுல வெற்றி கி.பி. 1024 இல் நிகழ்ந்தமையால் அதற்குப் பின்பே அந்நகரம் உருவாயிற்று எனலாம். எனவே அங்கு மறைந்த நாதமுனிகள் கி.பி. 1024 ஆம் ஆண்டிற்குப் பின்னரே மறைந்திருக்க வேண்டும் என்பர். இக்கருத் தினை ஏற்றுக்கொள்ள முடியாதவாறு பெருந்தடை யாக இருப்பது இராமானுசர் கி.பி. 1017இல் பிறந்தார் என்பதாகும். இஃது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட கருத்து, நாத முனிகளுக்குப் பின்னே உய்யக் கொண்டார். மணக்கால் நம்பி, ஆளவந்தார் ஆகியோர் வைணவ சமயத்தலைவர்களாக விளங்கியுள்ளனர். மேலும் நாதமுனிகள் இறந்த பின்னரே ஆளவந்தார் பிறந்தார் என்பது குருபரம்பரைச் செய்தி.

இதற்கு மாறாக, 'சம்பிரதாய பரிசுத்தி' என்னும் தேதிகன் நூலில் காணப்படும் குறிப்பொன்று நாத முனிகள் காலத்திலேயே ஆளவந்தார் அவதரித்து விட்டதாகத் தெரிவிக்கிறது.


மா. இராசமாணிக்கனார் கருத்தினை ஒப்புக் கொண்டால் நாதமுனிகள் காலத்திலேயே இராமா னுசர் பிறந்தார் என்று ஆகும். இடையிலுள்ள ஆசிரியர் களுக்கு வரலாற்றில் இடமில்லாமற் போய்விடும். எனவே இக்கருத்தினை ஏற்றுக்கொள்ள இயல வில்லை.

டி.ஏ. கோபிநாதராவ், கங்கைகொண்ட சோழ புரத்திற்கு நாதமுனிகள் இறந்த காலத்தில் அப்பெய ரில்லை என்றும், பிற்காலக் குரு பரம்பரை ஆசிரியர் கள் தங்கள் காலத்தில் வழங்கிய அப்பெயரால் அதனைச் சுட்டியுள்ளனர் என்றும் கூறிக் கங்கை கொண்ட சோழபுரத்தில் இறந்தார் என்பதனால் கி.பி. 1024ஆம் ஆண்டுக்குப் பின் மறைந்தார் என்பது சரியாகாது என்றும் விளக்கியுள்ளார். இக்கருத்தினை ஏற்றுக் கொள்வதில் பெருந்தொல்லை ஏதுமில்லை. இங்ஙனமாயின், கி.பி. 1024 ஆம் ஆண்டுக்கு முன்பே அந்நகரமும் அங்கு அரச குடும்பத்தினர் வாழும் அரண்மனையும் இருந்தன என்றும் இராசேந்திரன் தன் வடபுல வெற்றிக்குப்பின் அந்நகரினை விரிவு படுத்திக் கங்கைகொண்ட சோழபுரம் என்று மறுபெய ரிட்டு வழங்கினான் என்றும் கொள்ளவேண்டும். இவர் கருத்துப்படி நாதமுனிகள் கி.பி. பத்தாம் நூற் றாண்டின் பெரும் பகுதியில் வாழ்ந்தவராகக் கொண் டாலும் அவருக்கும் இராமானுசருக்கும் இடைப் பட்ட சமயத் தலைவர்களுக்குப் போதிய ஆண்டுகள் இல்லாமற் போகின்றன.

இந்நிலையில், திரு. மு. இராகவ ஐயங்கார் குறிப்பிடும் காலமே மற்ற ஆசாரிய பரம்பரைகட்கு மிகவும் இயைந்து வருவதால் பொருத்தமாகத் தோன்று கிறது. எனவே, நாதமுனிகள் கி.பி. 823இல் தோன்றி கி.பி. 918 இல் மறைந்தார் என்று கொள்வதே தக்க தாகும். அஃதாவது நாதமுனிகள் ஒன்பதாம் நூற்றாண் டின் பெரும் பகுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவராவர்.

# பெரிய புராணத்தில் சில வினாக்களும் விடைகளும்

**— பேராசிரியர் அ.ச.ஞா. விடை தருகிறார்**



பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம்

நாடறிந்த பெரும் பேராசிரியர் - விருதுகள் பல பெற்ற மூதறிஞர் - நம் மதிப்பிற்குரிய அறிஞர் பெருந்தகை அ.ச. ஞானசம்பந்தம் அவர்களிடம் பெரிய புராணத்திலிருந்து வாசகர்கள் கேட்டிருந்த சில வினாக்களை அளித்து விளக்கம் தருமாறு கேட்டு இருந்தோம். பேராசிரியரும் தம் பொன்னான நேரத்தை நமக்காக ஒதுக்கித் தந்து, நாம் வினவிய வினாக்களுக்கு மிக விளக்கமாக விடை வழங்கி உதவினார்கள்.

வாசகர்கள் தொடுத்திருந்த வினாக்களையும், பேராசிரியர் வழங்கிய விடைகளையும் இங்கு வழங்கியிருக்கிறோம். திருக்கோயில் வாசகர்கள் படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம்.

***வினாக்கள்***

1. **கோட்புலிநாயனார் இறைவனுக்கு வைத்த நெல்லை உண்டதாக - பச்சிளம் குழந்தையையும் கொன்றது சரிதானா?**
2. **சிறுத்தொண்ட நாயனார் பிள்ளைக்கறி சமைத்தது நியாயம்தானா?**
3. **இயற்பகை நாயனாரிடம் அவர்தம் துணைவியாரை இறையடியார் வேண்டியதும், அவர் தந்ததும் சரிதானா?**
4. **சண்டீசர் பதம் பெற்ற விசாரசருமர், தம் தந்தையின் கால்களை வெட்டியது முறைதானா?**

இவ்வினாக்களுக்குப் பெரிய புராண வித்தகர் - முதுபெரும் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் வழங்கியுள்ள விளக்கம் பின்வருமாறு:

ஒருவர் குற்றம் செய்தால் அக்குற்றத்திற்கு உடந்தையாகவோ, அதில் பங்கு கொண்டோ இருப்பவர்களும் குற்றவாளிகள்தாம்.

நாம் ஏறிச் செல்லும் மகிழ்வுந்து ஓட்டுநர் வேறு ஆளாக இருக்கலாம். அவர் ஒருவர்மேல் வண்டியை ஏற்றிப் பெருங்குற்றத்தை இழைத்து விட்டால் ஓட்டுபவர் மட்டுமே அதற்குப் பொறுப்பு - நமக்கதில் தொடர்பு இல்லை என்று சொல்ல முடியாது. வண்டிக்குச் சொந்தக்காரராகிய நாமும் அக்குற்றத்திற்கு ஓரளவு பொறுப்பாளிகள் ஆவோம்.

இன்றைய சட்டம் கூட இதனை ஏற்றுக் கொண்டு Vicarious Liablity என்று இதற்குப் பெயரும் இட்டுள்ளது.

இதனை நன்கு அறிந்தவர் சேக்கிழார்.

குற்றம் செய்த யானையை வெட்டி வீழ்த்திய எறிபத்தர். கடமையிலிருந்து தவறிய யானைப் பாகனையும், அதனை வழிநடத்திச் செல்ல வேண்டிய கடமை தவறிய ஆட்களையும் கொன்றுவிடுகிறார்.

இதனை அறிந்த அரசன், அவர்களைப் பணிக்கு அமர்த்திய தவறு தன்னுடையது ஆதலால் தானும் அதற்குப் பொறுப்பு என்று கூறித் தன்னையும் கொல்லுமாறு வாளை நீட்டுவது எறிபத்த நாயனார் வரலாற்றில் சேக்கிழாரால் சொல்லப்பட்டிருக்கக் காணுகின்றோம்.

ஆகவே இறைவனுக்கு என்று நெல்லை வைத்து அதனைத் தொடுபவர் பெருங்குற்றத்திற்கு ஆளாவர் என்று ஊரறிய ''விரையாக்கலி'' என்று மக்களுக்கு அறிவித்த கோட்புலியார் அந்த நெல்லை உண்ட தாயை வெட்டியது சரியே. அவள் பாலை உண்ட குழந்தையும் Vicarious Liability யின்படி அக்குற்றத்திற்கு ஆளாகிறது.

மனிதாபிமானம் என்ற அடிப்படையில் அடியார்கள் வாழ்க்கையில் விளக்கம் காண முற்படுவது சரியன்று; சராசரி மனிதர்களிடமிருந்து பல மடங்கு உயர்ந்து நிற்கின்ற இந்த நாயன்மார்கள், கொள்கை என்ற ஒன்றை எடுத்துக் கொண்டால் ஒருநாளும் அதனைவிட மாட்டார்கள். நாம் அவர்கள் நிலையிலிருந்து அவர்கள் செயலை ஆராய வேண்டுமே தவிர, நம்முடைய நிலைக்கு அவர்களை இழுத்து வந்து ஆராய்வது சரியன்று.

தனி ஒருவனைக் கொல்வது கொலைக் குற்றம். நாட்டைக் காப்பதற்காகக் கடமை பூண்டு தன்னை ஒத்த மனிதர்களைப் பகைவர் என்று பெயரிட்டுக் கொலை புரிவது வீரம் என்று பேசப் படுகின்றது; அதற்கு விருதும் வழங்கப்படுகின்றது.

ஆயினும் கொலை, கொலைதானே! அப்படியிருக்க இந்த இரண்டு கொலைகளையும், வேறு படுத்தி ஒன்றுக்கு மரண தண்டனையும், மற்றொன்றிற்கு விருதும் வழங்குவது எப்படி சரியாகும்?

இதைப் புரிந்து கொண்டால், கோட்புலியார் செயலையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்தபடியாக சிறுத்தொண்டர் தன் பிள்ளையைக் கறிசமைத்தது சரியா என்ற வினாவைப் பார்ப்போம்.

கொள்கை அல்லது கடமை என்ற ஒன்றிற்காகத் தம் பிள்ளையைக் கறி சமைக்கும் சோதனை யாருக்கு ஏற்பட்டது? நம்மைப் போன்ற சாதாரண மனிதருக்கு அன்று.

பல்லவ மன்னனுக்குச் சேனாதிபதியாக இருந்த பரஞ்சோதி. இவர் சாளுக்கியனை எதிர்த்து அவனுடைய தலைநகராகிய வாதாபி வரை சென்று ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்தார் அல்லவா!

தாய்நாட்டைக் காக்கும் கடமை காரண மாக இதனைப் பரஞ்சோதி செய்தார். பல்லவ மன்னனும் அவர் செயலைப் போற்றிப் பரிசளித்து ஓய்வு தந்தார்.

நாட்டை காத்தல் என்ற கடமைக்காக முன்பின் தெரியாதவர்களை வெட்டி வீழ்த்துவது சரி என்று அவரும் கருதினார். உலகமும் அதனை ஏற்றுக் கொண்டது.

அடியார்கள் எது கேட்டாலும் அப்பொருள் தன்பால் இருப்பின் அதனை மறுக்காமல் கொடுப்பது தம் கடமை. தம் கொள்கை என்ற முடிவில் வாழ்ந்தவர் பரஞ்சோதியார். எனவே நாட்டுப்பற்று என்ற கொள்கைக்காகப் பிறரைப் பலியிடுவது போல், தம் கொள்கையைக் காப்பாற்றுவதற்காகத் தம் மகனை அவர் பலியிடத் தயாராக இருப்பாரா? என்பது தான் வினா.

பரஞ்சோதியார் என்ற தனி மனிதருக்கு - அவர் கொண்ட கொள்கைக்கு ஏற்பட்ட சோதனையாகும் இது. அந்தச் சூழ்நிலையில் அவர் செய்த செயலை சராசரி மனிதர்கள் ஆகிய நாம், நம்முடைய சிறிய அளவுகோலைக் கொண்டு அளவிடுவது சரியாகாது.

அதனால்தான் நாயன்மார்களை சராசரி மனிதரில் இருந்து மிக உயர்ந்து நிற்கும் அடியார்கள் - வீரர்கள் என்று சேக்கிழாரே போற்று கிறார்.

அகங்கார, மமகாரமாகிய இரண்டையும் அறவே போக்கினால் தான் அடியாராக ஆக முடியும். இவை இரண்டும் போனபிறகு மகன் என்றும், மனைவி என்றும் உறவு கொண்டாடக் கூடியவர்கள் நாயன்மார்களாக இருக்க இயலாது.

நான் என்ற அகங்காரமும், எனது என்ற மமகாரமும் போனபிறகு என் மனைவி, என் பிள்ளை என்று நாயன்மார்கள் எண்ண மாட் டார்கள்.

எனவே அகங்கார, மமகாரம் அற்ற இவர்கள் செயலை - இவை இரண்டின் வடிவமாக வாழுகின்ற நாம் அளவிட முற்படுவதும், ஆராய்வதும் பொருத்த மற்றதாகும்.

அகங்கார, மமகாரம் அற்றவர்கள்தாம் நாயன்மார்கள். அத்தகைய நாயன்மாராக இயற்பகையாரை நம் கண்முன் நாம் காணவேண்டும்.

தூர்த்த வேடத்தில் வந்த ஒருவர் ''காதல் உன் மனைவியை வேண்டி வந்தனம்'' என்று எதிரே சொன்ன போதிலும் இயற்பகையாருக்கு எவ்வித உணர்ச்சி வேறுபாடும் தோன்றியதாகத் தெரியவில்லை.

''இது நமக்கு முன்பு உள்ளது'' என்று கூறுகின்ற அளவிற்கு வளர்ந்து நிற்கின்றார் இயற்பகையார்.

''உன் மனைவியை வேண்டி வந்தனம்'' என்ற சொல் அவரைப் பொறுத்தமட்டில் எவ்வித உணர்ச்சியையும் ஏற்படுத்தாமல் ''இது நமக்கு முன்பு உள்ளது'' என்று அவர் பேசுகிறார் என்றால் நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மமகாரத்தின் முழு வடிவமாக இருப்பவள் மனைவி. ஆனால் இயற்பகையாரைப் பொறுத்த மட்டில் அந்த மனைவி அவருடைய வீட்டிலுள்ள குடம், தவலை, நாற்காலி, கைக்குடை என்பவை போலவே கருதப்படும் பொருளாக ஆகிவிட்டது. அதனால்தான் ''இது நமக்கு முன்பு உள்ளது'' என்று பேசுகிறார்.

அடுத்த வீட்டுக்காரர் நம்முடைய குடையைச் சற்று இரவல் கேட்டால், எவ்வித மனக் கிலேசமும் இல்லாமல் ''இதோ இருக்கிறது, எடுத்துப் போங்கள்'' என்று சொல்லுவதைப் போல இயற்பகையார் விடை இறுக்கிறார்.

நம் போன்ற சாதாரணமான மக்களைப் பொறுத்தமட்டில் மனைவிக்கும், குடைக்கும் வேறுபாடு உண்டு. இரண்டும் மமகாரத்தின் விளைவுதான் என்றாலும் மனைவி உயிரோடு கூடிய பொருளாகவும், குடை தேவைப்படும் பொழுது பயன்படக்கூடிய பொருளாகவும் வேறுபட்ட நிலையில் உள்ளன.

நாமே மயக்கமுற்றுள்ள நிலையில் இருக்கும் பொழுது பக்கத்தில் உள்ளவர்கள் ''கண்ணைத் திறந்து பாருங்கள். உங்கள் மனைவி வந்திருக்கிறாள். உங்கள் மகன் வந்திருக்கிறான்'' என்று சொல்லும்பொழுது Deep Coma போன்ற ஆழந்த மயக்கத்தில் உள்ள பொழுது எவ்வித வேறுபாட்டையும் தோற்றுவிப்பதில்லை.

மமகாரத்தை அறவே ஒழித்த இயற் பகையார், அடியார்கள் விரும்பியதைக் கொடுப்பதுதான் தம் பிறப்பின் பயன் என்ற முடிவில் உறுதியாக நிற்கின்றார். எனவே ''இது என்னிடத்தில் ஏற்கனவே உள்ளது. எடுத்துப் போகலாம்'' என்கிறார்.

அகங்கார, மமகாரங்களை அறவே ஒழித்து இறை உணர்வில் ஆழ்ந்து நிற்கின்றவர்கள் செய்கின்ற செயலை, அவர்களுடைய அளவுகோலைக் கொண்டு அளக்க வேண்டுமே தவிர, நம்முடைய அளவுகோலில் அளப்பது சரியன்று.

லிட்டரும், மீட்டரும் அளவுக் கருவிகள் தான். பாலை லிட்டரில் அளக்க வேண்டும். துணியை மீட்டரில் அளக்க வேண்டும். லிட்டர் அளவுக்கருவி இல்லாதபொழுது, மீட்டரும் அளவுக்கருவிதானே என்று கூறிக் கொண்டு, பாலை மீட்டரில் அளக்க முற்படுவது சரியான செயல் ஆகாது.

ஆகவே அடியார்கள் செயலை அவர்களின் அளவுகோலைக் கொண்டுதான் அளக்க வேண்டும்.

சண்டேசர் என்று பின்னர் பெயர் பெற்ற விசார சருமர். சிவபூசையில் ஈடுபட்டிருந்தார். பால்குடத்தில் அபிடேகத்திற்குரிய பால் வைக்கப்பட்டிருந்தது.

பால் ஒன்றுதான். ஆனால் காப்பி போடுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பாலை நாம் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இறைவனின் அபிடேகத்திற்கு உரியது என்று குறிக்கப்பட்டு ஒரு பாத்திரத்தில் வைத்து விட்டால் அதன் தன்மையே வேறு.

அரசு ஊழியர்களுக்கு இது நன்கு தெரியும். ஒரு குறிப்பிட்ட செயலுக்கு என்று பணத்தை ஒதுக்கி வைத்துவிட்டால் (Year Marked Fund) எக்காரணத்தைக் கொண்டும் அதை மற்றொரு துறைக்குப் பயன்படுத்தக் கூடாது.

இதே நிலைமைதான் விசாரசருமர் வரலாற்றில் நிகழ்கின்றது. அவர் குடிப்பதற்கென்று பாலை வைத்திருந்து அதை ஒருவர் காலால் இடறி விட்டால் உலகம் ஒன்றும் நின்றுவிடாது. ஆனால் இறைவனின் அபிடேகத்திற்கு என்று குறிக்கப்பட்ட பொழுது அந்தப் பால் தனிப்பெருமை பெற்று விடுகின்றது.

விசாரசருமரின் தந்தை வைதிகன். ஆதலால் சிவலிங்கத்தையோ, அபிடேகத்தையோ, சிவபூசையையோ அவன் நம்பாதவன், ஏற்றுக்கொள்ளாதவன். ஆகவேதான் அவன் அந்தக் குடத்துப் பாலைக் காலால் இடறினான்.

விசாரசருமர் சிவ அபராதம் நிகழ்ந்து விட்டதற்காகக் கீழே கிடந்த குச்சியை எடுத்து அவன் காலில் அடித்தார். சிவ அபராதம் ஆதலால் குச்சி கோடலியாக மாறிற்று. இதில் விசார சருமர் செய்த செயல் ஒன்றும் இல்லை. இதைப் புரிந்து கொள்வதும் எளிது.

நம்முடைய வீட்டில் ஒருவன் பணத்தைத் திருடிவிட்டால் அதற்குரிய தண்டனை வேறு. அரசாங்கப் பணத்தைக் கையாடி விட்டால் அதற்குரிய தண்டனை வேறு.

இரண்டும் பணத்திருட்டுதான். ஆனால் ஒன்று தனி மனிதராகிய நம்முடைய பணம். மற்றொன்று அரசின் சொத்தாகிய பொதுப்பணம். எனவேதான் தண்டனை மாறுகிறது.

குடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த குடத்துப் பால் அன்று. அபிடேகத்திற்குரிய பால் ஆதலால் பெருந்தண்டனை கிடைத்தது.

## உங்களுக்குத் தெரியுமா?

**விடை இதுதான்:**

திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த இமயமலை அடிவாரத்தில் உள்ள திருத்தலம் **திருப்பிரிதி** என்பதாகும். **'ஜோஷிமட்'** என்று இப்பொழுது இத்தலம் வழங்கப்படுகிறது.

# வாசகர் எண்ணங்கள்

அறநிலையத்துறை கோடைக்கால சைவ, வைணவ சமய வகுப்புகளை நடத்தியது போற்றுதலுக்குரிய சமயப் பணியாகும்.

இச்சமயப் பயிற்சி வகுப்புகளை ஒவ்வொரு வருடமும் தவறாமல் நடத்த அறநிலையத்துறை ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

- இரா. முரளி கிருஷ்ணன்,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்பதுபோல வண்ண மேலட்டை இல்லாத எந்த இதழும் சிறப்பினையும் மக்களிடம் வர வேற்பினையும் பெற இயலாது. ஜூன் 98 திருக்கோயில் இதழின் மேலட்டை திருத்தணி முருகரால் பொலிவு பெற்று விளங்கியது. ஒவ்வொரு இதழையும் இவ்வாறே வண்ண மேலட்டையுடன் வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன்.

-கு. நடேசன்,
வில்லிவாக்கம், சென்னை.

''வினாவும் விடையும்'' பகுதியைத் திருக்கோயில் இதழில் தொடங்கியிருப்பது பாராட்டிற்குரியது. பெரிய புராணத்தில் எனக்குள்ள ஐய வினா ஒன்றினை இத்துடன் இணைத்துள்ளேன். விடை தரக் கேட்டுக் கொள்கிறேன்.

- பன்னீர் செல்வம்,
திருவள்ளூர்.

(இவ்வாசகரின் வினாவிற்குரிய விடை இவ்விதழில் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்களிடம் இருந்து பெறப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.)

''கம்பனும் திருமுறைகளும்'' - மிகவும் பயனுள்ள கட்டுரை. திருமுறைகளில் கம்பனுக்கு உள்ள ஈடுபாட்டினை அறிந்து பெரிதும் நெகிழ்ந்து போனேன். இக்கட்டுரைத் தொடரினைப் படிக்கப் பெரிதும் ஆவலாக உள்ளேன்.


- வ. செந்தில் குமரன்.
ஈரோடு.

★ ★ ★

## இணை ஆணையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்

திருக்கோயில் இதழ் தற்பொழுது புதுப்பொலிவுடன் ஒளி அச்சு முறையில் வெளியிடப்பட்டு வருவதால் ஆயுள் உறுப்பினர் கட்டணம் 500 எனத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 500 பெற்று வங்கி வரைவோலை எடுத்து அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.




மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் 11.6.98 அன்று திருஞானசம்பந்தர் திருநாள்விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு. ச. மெய்கண்டதேவன் இ.ஆ.ப அவர்கள் இவ்விழா விற்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். இதேவிழாவில் அறநிலையத்துறையின் திருக்கோயில்கள் சார்பில் வெளியிடப்பெற்ற 7 தலபுராணங்கள், 504 தலவரலாறு நூல்கள், 2 பிள்ளைத்தமிழ் நூல்கள் மற்றும் திருத்தணிகை ஆற்றுப்படை நூல்களை அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு. ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுச் சிறப்பித்தார்கள்.





திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் 19.6.98 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 75 இலவசத் திருமணங்களை நடத்தி வைத்துச் சிறப்பித்தார்கள். மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு, அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இத்திருமண விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அறநிலையத்துறைச் செயலர் திருமிகு. த.இரா. சீனிவாசன், இ.ஆ.ப., அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப., திருவள்ளுவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். தவத்திரு சுவாமி இராமதாசர் ஆசியுரை வழங்கினார். அறங்காவலர் குழுத் தலைவர் திரு. டெக்கான் மூர்த்தி அவர்களும், அறங்காவலர்களும், திருக்கோயில் நிர்வாக அதிகாரி - இணை ஆணையாளர் திரு. ப. இராஜா, பி.எஸ்.சி., பி.எல்., அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.